# அன்னம் பஹுகுர்வீத

உணவைப் பெருக்கிப் பகிர்ந்துண்ணும்
பாரதீய சனாதன தருமம்

ஜிதேந்த்ர பஜாஜ்
மண்டயம் தொட்டமனெ ஶ்ரீநிவாஸ்

தமிழாக்கம்
விஜயலட்சுமி ஶ்ரீநிவாஸ்

சென்டர் பார் பாலிஸி ஸ்டடீஸ், சென்னை

# *அன்னம் பஹுகுர்வீத*

### *பாரதமக்களின் உணவு நுகர்வளவு உலகிலேயே குறைவானது*

*பாரதம் இன்று மிகுந்த உணவுப் பற்றாக்குறையினால் அவதிப் படுகிறது. கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளாக பாரதத்தில் மனித நுகர்வுக்கென கிடைக்கப்பெறும் உணவு தானியங்களின் அளவு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 200 கிலோவை விட குறைவாகவே இருந்து வருகிறது. ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 200 கிலோ என்ற அளவு நூறு ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் ஆட்சியினரால் நியமிக்கப்பட்ட பஞ்சகால ஆய்வுக் குழுவால் பஞ்சகால நிலைமை யைத் தவிர்க்கத் தேவையான குறைந்தபட்ச உணவின் அளவு என மதிப்பிடப்பட்டது. உண்மையில், இந்நாடு பிரிட்டானிய ஆட்சி தொடங்கிய சில பத்தாண்டுகளுக் குள்ளாகவே கிட்டத்தட்ட பஞ்ச நிலையை அடைந்து விட்டது. அன்று முதல் இன்று வரையிலும் நாம் அதே நிலையிலேயே தங்கியுள்ளோம்.*

*பாரதம் தற்பொழுது கிட்டத்தட்ட 90 கோடி ஜனத்தொகைக்கு சுமார் 18 கோடி டன்கள், அதாவது ஆள் ஒருவருக்கு ஆண்டிற்கு கிட்டத்தட்ட 200 கிலோ உணவு தானியம் உற்பத்தி செய்கிறது. இந்த மொத்த உற்பத்தியிலிருந்து, கால்நடைகளுக்கென்று பங்கு எதுவும் ஒதுக்கப்படத் தோவையில்லை என்றே கருதினாலும் கூட விதைகளுக்கும் சேதத்திற்கும் ஒதுக்கீடு செய்துதான் ஆக வேண்டும். இந்தத் தள்ளுபடிகளைக் கணக்கிட்ட பின், 1990-ல் மனித நுகர்வுக்கான உணவு தானியத் தொகை ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு கிட்டத்தட்ட 180 கிலோவாக மதிப்பிடப்பட்டது. இது நூறு ஆண்டுகளுக்கு முன்பு பஞ்ச ஆய்வுக் குழுவினர் பசியினால் இறப்பதைத் தவிர்க்கத் தேவைப்படும் மிகக் குறைந்தபட்ச உணவென்று மதிப்பிட்ட அளவிற்கு குறைவானதே*

ஆகும். தவிர, இது உலகின் வேறெந்தப் பகுதியின் சராசரி மனித நுகர்வளவை விட மிகக் குறைந்ததே.

பாரத நாட்டைப் பொருத்தவரை தானியங்களும் பயறு வகைகளும் மட்டுமே அடிப்படையான உணவுப் பொருட்களின் முழுப்பகுதியாய் விளங்குகின்றன. இங்கு மாமிசம், மீன் வகைகளின் நுகர்வளவு மிகவும் சொற்பமே. மேலும் ஆப்பரிக்காவின் பெரும்பான்மையான பகுதிகளிலும், ஐரோப்பாவின் சில பகுதிகளிலும் முக்கியமான உணவுப் பொருளாய் விளங்கும் மாவுச்சத்துள்ள கிழங்குகளின் நுகர்வளவு கூட பாரதத்தில் மிக்க குறைவாகவே உள்ளது. 1990-ல் பாரதத்தின் மாமிசம் மற்றும் மீன் வகைகளின் நுகர்வு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிகு 7.5 கிலோ அளவாகவும், கிழங்குகளின் நுகர்வளவு 20.5 கிலோவாகவும் மதிப்பிடப்பட்டது. இவ்வாறு மொத்த அடிப்படை உணவுப் பொருள்களின் நுகர்வளவு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 200 கிலோவிற்கு ஒரு சிறிதளவே அதிகமாக, கிட்டத்தட் 208 கிலோவென மதிப்பிடப்பட்டது.

உலகின் பெரும்பாலான நாடுகளில் அடிப்படையான உணவுப் பொருட்கள் அதாவது தானியங்கள், பயறு வகைகள், கிழங்குகள் மற்றும் மாமிசம், மீன் வகைகள் இவற்றின் மொத்த நுகர்வளவு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு கிட்டத்தட் 300 கிலோ ஆகும். (பார்க்க அட்டவணை1). இதில் மாமிசம் மற்றும் மீன் வகைகளின் நுகர்வளவு ஐரோப்பாவிலும், ஐரோப்பிய இனத்தவர் வசிக்கும் உலகின் மற்ற பகுதிகளிலும் கிட்டத்தட்ட 100 கிலோவாகவும், ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் இதை விட மிகவும் குறைந்த அளவாக ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு கிட்டத்தட்ட 30 கிலோவாகவும் உள்ளது. ஆக, ஆசியா, ஆப் பிரிக்கா பகுதிகளில் தானியங்களும், பயறு வகைகளும், கிழங்கு வகைகளும் மட்டுமே அடிப்படை உணவின் முக்கிய அம்சங்களாய் விளங்குகின்றன.

இவ்வாறு பாரத மக்களின் மூலாதார உணவு நுகர்வளவு உலகின் பொது நுகர்வளவான 300 கிலோவிற்கு மூன்றில் ஒரு பங்கு குறைவாக உள்ளது. இந்த அளவிற்கு குறைவான நுகர்வளவு பாரதத் துணைக்கண்டத்திற்கு வெளியே உலகில் மிகச் சில நாடுகளில் மட்டுமே உள்ளது. குறிப்பாக, ஆப்பிரிக்காவிலுள்ள சூடான்,

எத்தியோப்பியா, ஸோமாலியா நாடுகள், மத்திய மற்றும் தென்

அட்டவணை 1:1990-ல் ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கான அடிப்படை உணவுப் பொருட்களின் சராசரி நுகர்வளவு (கிலோக்களில்)

| | தானியங்கள் | கிழங்குகள் | பயறுகள் | மொத்த தானியம் வகையறா | இறைச்சி | மீன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| உலகம் | 170.7 | 62.4 | 6.5 | 239.6 | 34.9 | 13.1 | 287.6 |
| ஐரோப்பா | 127.1 | 80.2 | 3.3 | 210.6 | 88.1 | 18.8 | 317.5 |
| ஐக்கிய அமெரிக்கா | 113.4 | 59.8 | 3.4 | 176.6 | 119.0 | 21.6 | 317.2 |
| ஸோவியத்நாடு | 166.4 | 97.0 | 2.2 | 265.6 | 74.4 | 29.1 | 369.1 |
| ஆஸ்திரேலியா | 111.8 | 66.0 | 0.8 | 178.6 | 118.0 | 15.8 | 312.4 |
| தென்அமெரிக்கா | 114.3 | 75.4 | 9.1 | 198.8 | 47.0 | 8.2 | 254.0 |
| ஆப்பிரிக்கா | 138.0 | 148.5 | 8.9 | 295.4 | 15.6 | 7.7 | 318.7 |
| ஆசியா | 196.7 | 39.0 | 6.5 | 242.2 | 17.5 | 11.6 | 271.3 |
| இந்தியா | 166.1 | 20.5 | 13.4 | 200.0 | 4.2 | 3.3 | 207.5 |
| பாகிஸ்தான் | 154.5 | 5.3 | 4.8 | 164.6 | 12.3 | 1.8 | 178.7 |
| பங்களாதேஷ் | 206.5 | 11.4 | 4.6 | 222.5 | 2.8 | 7.0 | 232.3 |
| ஸ்ரீலங்கா | 161.1 | 25.2 | 6.2 | 192.5 | 1.6 | 14.2 | 208.3 |
| நேபாள் | 216.3 | 34.6 | 6.6 | 257.5 | 6.5 | 0.7 | 264.7 |
| மையன்மார் | 235.5 | 4.3 | 4.4 | 244.2 | 7.1 | 15.0 | 266.3 |
| சீனா | 232.5 | 59.1 | 3.4 | 295.0 | 26.7 | 9.7 | 331.4 |
| ஜப்பான் | 145.2 | 37.6 | 2.4 | 185.2 | 41.0 | 71.8 | 298.0 |

அமெரிக்காவிலுள்ள க்வாடெமாலா, வைத்தி, பேரு நாடுகள் இதைத் தவிர கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் ஓரிரண்டு நாடுகள், ஆகியவை மட்டுமே அடிப்படை உணவுப் பொருட்களின் நுகர்வளவில் நம்மைப்போலவே மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளன. இந்நாடுகளில் பெருபாலானவை நீண்ட காலமாக ஸ்திரமற்ற அரசியல் நிலையில் தவித்துக் கொண்டிருப்பது நாம் அறிந்ததே. எனினும் இந்நாடுகளில் கூட நாம் குறிப்பிட்டுள்ள அடிப்படை உணவுப் பொருட்களின் பற்றாக்குறை மற்ற சில உணவுப் பொருட்களின் மூலம் ஈடுகட்டப் படுகிறது. சூடானிலும், ஸோமாலியாவிலும் உணவுப் பொருட்களுக்குக் கூடுதலாக மிகுதியான பால் நுகரப்படுகிறது. சூடானில் சராசரி பால் நுகர்வளவு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 116 கிலோவாகவும், ஸோமாலியாவில் 226 கிலோவாகவும் உள்ளது. ஆப்பிரிக்காவின் மற்ற நாடுகளிலும், மத்திய

மற்றும் தென் அமெரிக்கா நாடுகளிலும், மிகுதியான அளவில் வாழைப்பழங்களும், நேந்திரம் பழங்களும் இன்னும் மற்ற பழ வகைகளும் சேர்ந்து மூலாதார உணவின் பற்றாக்குறையை பெருமளவில் ஈடு செய்கின்றன.

பொதுவாக ஸ்திரமான அரசியல் நிலை கொண்ட நாடுகள் தம் மக்கள் அனைவருக்கும் ஆண்டிற்கு குறைந்தது 300 கிலோ அளவிலான உணவுப் பொருட்களை வழங்கும் திறனைக் கொண்டிருக்கின்றன. இதில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் இவ்வளவிலான உணவு நுகர்வளவை அடையத் தேவையான உணவைத் தயக்கமின்றி இறக்குமதியும் செய்கின்றன. நமது பாரதத் துணைக்கண்டத்தைத் தவிர ஆசியாவில் தாய்லாந்தும் ஆப்பிரிக்காவின் கென்யாவும் மட்டுமே இதற்கு விதிவிலக்காக உள்ளன. இவ்விரு நாடுகளும் நம்மைப் போலவே ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் திணிக்கப் பட்ட பொது வாழ்க்கை நிர்வாக முறைகளை இன்னமும் இறுகப் பற்றிக் கொண்டுள்ளன என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

பாரதத்துணைக்கண்டத்தினுள் ஆள் ஒருவருக்கு ஆண்டொன் றிற்கு கிட்டத்தட் 260 கிலோ அடிப்படை நுகர்வளவுள்ள நேபாள மும், 230 கிலோ நுகர்வளவைக் கொண்டுள்ள பங்களாதேசமும் நம்மை விட ஒரளவிற்கு நிறைவான நிலையில் உள்ளன. ஸ்ரீலங்கா வில் அடிப்படை உணவின் நுகர்வளவு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 200 கிலோ ஆகும். ஆயினும் அங்கு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு கிட்டத்தட்ட 70 கிலோ அளவிலான தேங்காய் நுகரப்படுவதால் அங்குள்ள நிலைமையும் பாரதத்தின் நிலையை விட மேலானதாகவே உள்ளது. துணைக்கண்டத்தினுள், பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் மட்டுமே நம்மை விடக் குறைவான அடிப்படை உணவு நுகர்வளவைக் கொண்டுள்ளன.

இவ்வாறு பாரதம் மற்றும் பாரதத் துணைக்கண்டத்திலுள்ள மற்ற சில நாடுகளின் தற்போதைய நிலைமை மிகவும் அசாதாரண மானதே. உலகில் வேறெங்குமே ஏற்றுக் கொள்ளப்படாதே மிகக் குறைந்த சராசரி அடிப்படை உணவு நுகர்வளவினைக்கொண்டே நாம் வாழ்ந்து வருகிறோம். தவிர நாம் நுகர்ந்து வரும் உணவானது பஞ்சகாலத்தில் நுகரப்படும் அளவை விட ஒரு சிறிதும் அதிகமானதல்ல.

## பாரதத்தின் கால்நடைகளுக்கு உணவேதும் இல்லை

பாரதத்தில் மனித நுகர்வுக்கான உணவின் நிலை இவ்வாறெனில் மனித நுகர்வையும் மற்றனைத்து விதமான உணவுப் பயனீட்டையும் ஒருங்கிணைத்துப் பார்த்தோமெனில் நம் நாட்டின் நிலைமை மேலும் கவலைக்குரியதாகவே உள்ளது. பாரத்தில் மொத்தமாய் கிடைக்கப்பெறும் உணவு தானியங்கள் மற்றும் கிழங்கு வகைகளின் அளவு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு சராசரியாக 230 கிலோ என்பதைப் பார்த்தோம். இதிலிருந்து மனிதர்களின் நுகர்வுக்கென பயன்படுவது கிட்டத்தட்ட 208 கிலோ ஆகையால், விதைகளுக்கும் தேசத்திற்கும் ஒதுக்கீடு செய்த பிறகு கால்நடைகளுக்கும் மற்ற விலங்கினங்களுக்கும் உணவாக எஞ்சுவது ஒன்றும் இல்லை என்றே கூறலாம்.

உலகத்தின் பெரும்பாலான நாடுகளில் கால்நடைகளுக் கென்றே பெருமளவிலான உணவு தானியங்கள் உற்பத்தியின் மூலமாகவோ அல்லது இறக்குமதியின் மூலமோ ஒதுக்கப் படுகின்றன. பெரும்பாலும் உலகின் எல்லா நாடுகளிலும் கிடைக்கப்பெறும் உணவு தானியங்கள் மற்றும் கிழங்கு வகைகளின் மொத்த அளவு, அதாவது இவற்றின் உற்பத்தி மற்றும் நிகர இறக்குமதியின் கூட்டுத்தொகை, அந்நாடுகளில் நேரடி மனித நுகர்வுக்குப் பயன்படும் அளவிற்கு கிட்டத்தட்ட இரு மடங்காகவே உள்ளது. அதாவது கிடைக்கப்பெறும் மொத்த உணவு தானியத்தின் கிட்டத்தட்ட பாதி அளவு, பெரும்பாலான உலக நாடுகளில், கால் நடைகளுக்கே வழங்கப்படுகிறது. இவ்வாறு ஐரோப்பாவில் கிடைக் கப்பெறும் மொத்த உணவு தானியங்கள் மற்றும் கிழங்குகளின் அளவு ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு கிட்டத்தட்ட 700 கிலோவாக உள்ளது. இதுவே சீனாவில் கிட்டத்தட்ட 450 கிலோவாகவும் ஐக்கிய அமெரிக்க நாட்டில் 900 கிலோவாகவும் உள்ளது. (பார்க்க அட்டவணை 2).

பாரத நாட்டில் தற்பொழுது கிடைக்கும் மொத்த உணவு தானிய அளவானது உலகின் மற்றனைத்து நாடுகளைப்போல் நாமும் கால்நடைகளுக்கென உணவு ஒதுக்கீடு செய்தோமெனில், தேவைப்படும் மொத்த உணவின் அளவில் பாதிக்கும் குறைவானதேயாகும்.

நாம் இத்துணைக் குறைந்த அளவில் உணவு உற்பத்தி செய்வதால் நம் நாட்டிலுள்ள 27 கோடி கால்நடைகளுக்கு நாம் சிறிதளவு கூட உணவு தானியங்களை ஒதுக்குவதில்லை. ஐரோப்பா தன் 12.4 கோடி

கால்நடைகளுக்காக 17 கோடி டன் உணவு தானியங் களையும் (இது கிட்டத்தட்ட நம்முடைய மொத்த உணவு தானிய உற்பத்திக்கே சமமாகும்) மற்றும் 5.4 கோடி டன் கிழங்கு வகைகளையும் அளித்து வருகிறது. சீனா தன் 10 கோடி கால்நடைகள் மற்றும் 30 கோடிபன்றிகளின் பொருட்டு 6.5 கோடி டன் உணவு தானியங்களையும் 6 கோடி டன் கிழங்கு வகைகளையும் ஒதுக்குகிறது. (பார்க்க அட்டவணை 3).

அட்டவணை 2: தானியம், பயறு மற்றும் கிழங்கு வகைகளின் ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கான மனித நுகர்வளவும் மற்றும் மொத்த வழங்கீடும் (கிலோக்களில்)

| | தானியங்கள் | | பயறுகள் | | கிழங்குகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உணவு | வழங்கீடு | உணவு | வழங்கீடு | உணவு | வழங்கீடு | உணவு | வழங்கீடு |
| உலகம் | 170.7 | 347.8 | 6.5 | 11.2 | 62.4 | 116.3 | 239.6 | 475.2 |
| ஐரோப்பா | 127.1 | 528.6 | 3.3 | 17.5 | 80.2 | 157.3 | 210.6 | 703.5 |
| ஐக்கிய அமெரிக்கா | 113.4 | 874.0 | 3.4 | 3.8 | 59.8 | 75.2 | 176.6 | 952.9 |
| ஸோவியத்நாடு | 166.4 | 887.6 | 2.2 | 33.3 | 97.0 | 146.2 | 265.6 | 1067.1 |
| ஆஸ்திரேலியா | 111.8 | 463.8 | 0.8 | 33.4 | 66.0 | 74.4 | 178.6 | 571.6 |
| தென்அமெரிக்கா | 114.3 | 240.2 | 9.1 | 10.5 | 75.4 | 98.3 | 198.8 | 349.0 |
| ஆப்பிரிக்கா | 138.0 | 183.4 | 8.9 | 11.3 | 148.5 | 206.0 | 295.4 | 400.7 |
| ஆசியா | 196.7 | 267.2 | 6.5 | 8.3 | 39.0 | 71.1 | 242.2 | 346.6 |
| இந்தியா | 166.1 | 189.6 | 13.4 | 16.4 | 20.5 | 25.9 | 200.0 | 231.9 |
| பாகிஸ்தான் | 154.5 | 173.8 | 4.8 | 6.7 | 5.3 | 6.7 | 164.6 | 187.2 |
| பங்களாதேஷ் | 206.5 | 223.3 | 4.6 | 5.0 | 11.4 | 13.8 | 222.5 | 242.0 |
| ஸ்ரீலங்கா | 161.1 | 176.4 | 6.2 | 6.6 | 25.2 | 25.3 | 192.5 | 208.2 |
| நேபாள் | 216.3 | 269.2 | 6.6 | 8.1 | 34.6 | 44.6 | 257.5 | 321.8 |
| மையன்மார் | 235.5 | 272.7 | 4.4 | 8.2 | 4.3 | 5.0 | 244.2 | 285.9 |
| சீனா | 232.5 | 319.3 | 3.4 | 5.1 | 59.1 | 130.1 | 295.0 | 454.5 |
| ஜப்பான் | 145.2 | 319.4 | 2.4 | 2.6 | 37.6 | 58.3 | 185.2 | 380.3 |

இவ்வாறு பாரதத்தின் உணவு தானிய உற்பத்தி நிலை தன் மனித சமூகமும் விலங்கினங்களும் பசிப்பிணியுடன் துன்புறும் அவல நிலையில் உள்ளது.

## பற்றாக்குறையும் சுரணையின்மையுமே பண்பாடாய் உருப்பெற்றுள்ளன

பாரதத்தில் உணவு உற்பத்தி மற்றும் நுகர்ச்சி பற்றிய அனைத்து புள்ளிவிவரங்களும் நம் நாடெங்கும் பரவலாக வியாபித்திருக்கும் மனித

சமூகம் மற்றும் விலங்கினங்களின் பசிப்பிணிக் கொடுமையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. நம் மக்களின் உடல்நலத்தை அறிவுறுத்தும் கருவிகள் அனைத்தும் நம் நாட்டைத் தீவிரமாய்ப் பாதிக்கும் இப்பிசிப்பிணியையே பிரதிபலிக்கின்றன. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் புள்ளி விவரங்களின்படி 40% பாரத மக்களுக்கு உயிர் வாழத் தேவையான குறைந்தபட்ச கலோரிகள் கூட கிடைப்பதில்லை. தவிர, ஐந்து வயதுக்குட்ப்பட்ட குழந்தைகளில் 63% குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்படுகின்றனர், கர்ப்பிணிப் பெண்களில் 88% பேர் இரத்த சோகையால் பீடிக்கப்படுகின்றனர்.

அட்டவணை 3: 1990-ல் கால்நடைகளுக்கு தீனியாக ஒதுக்கப்பட்ட அடிப்படை உணவுப் பொருட்களின் சராசரி அளவு (மில்லியன் டன்களில்)

| | தானியங் கள் | கிழங்கு கள் | பயறு கள் | எண்ணெய் விதைகள் | பால் வகையறா | மீன் |
|---|---|---|---|---|---|---|
| உலகம் | 675.1 | 153.8 | 18.1 | 14.0 | 111.0 | 29.2 |
| ஐரோப்பா | 161.2 | 54.3 | 6.5 | 2.7 | 38.9 | 9.0 |
| ஐக்கிய அமெரிக்கா | 152.0 | 0.3 | 0.0 | 2.1 | 0.8 | 1.1 |
| ஸோவியத்நாடு | 149.6 | 19.9 | 7.9 | 0.7 | 51.4 | 2.7 |
| ஆஸ்திரேலியா | 4.2 | 0.0 | 0.4 | 0.0 | 1.0 | 0.1 |
| தென்அமெரிக்கா | 28.1 | 12.5 | 0.0 | 0.9 | 3.3 | 1.8 |
| ஆப்பிரிக்கா | 14.6 | 1.7 | 0.2 | 0.0 | 1.2 | 1.5 |
| ஆசியா | 129.8 | 64.2 | 2.9 | 5.2 | 12.9 | 1.9 |
| இந்தியா | 1.5 | 0.0 | 1.0 | 1.1 | 6.0 | 0.2 |
| சீனா | 63.5 | 60.1 | 1.3 | 2.7 | 0.8 | 4.8 |
| ஜப்பான் | 18.1 | 0.8 | 0.0 | 0.2 | 1.4 | 4.1 |

எனினும், நம் நாடெங்கும் பரவியுள்ள பசிப்பிணியை உணர புள்ளிவிவரங்கள் ஏதும் தேவையில்லை. பாரதத்தின் சிறு நகரங்களிலும், மாநகர்களிலும் நாய்கள் மற்றும் பசுக்கள் தெருக்களிலும் சந்து பொந்துகளிலும் சுற்றித்திரிந்து குப்பை குளங்களிலிருந்து தம் உணவைத் தேடி உண்பதை நாம் தினமும் காண்கிறோம். மேலும் பெரிய மாநகர்களில் சில சமயங்களில் இப்பசு, நாய்களுக்குப் போட்டியாக சிறுவர் சிறுமிகளோ அல்லது பெரியவர்கள் கூட அக்குப்பைகளிலிருந்து உணவைத் தேடி எடுக்கும் அவலக் காட்சியையும் நாம் காண்கிறோம்.

பாரதத்தை ஊடுருவிச் சென்று புதுநாகரிகப் பண்பாட்டினை அறைகூவும் நம் மாபெரும் ரயில் வண்டிகளில் பயணத்தை மேற் கொள்ளும் போது நம் நாட்டின் பசிக்கொடுமையையும், மக்கள் பட்டினியால் வாடுவதையும் மேலும் கண்கூடாகவே காண்கிறோம். கண்களில் இளவயதின் சுறுசுறுப்பும் ஆர்வமும் பொங்கும் சிறுவர்கள் ஒரு சிறிதளவு உணவிற்காக ரயில் பெட்டிகளைப் பெருக்க வருவதும், காலணிகளைத் துடைக்க முற்படுவதும், பிரயாணிகளின் எஞ்சியுள்ள உணவிற்காகத் தமக்குள் சண்டையிடவும் திராணியின்றி ரயில் நிலைய நடைபாதையில் நின்றுகொண்டு, பிரயாணிகள் உண்ணும் வரை காத்திருந்து அவர்கள் அளிக்கும் ஒரு வறட்டு ரொட்டியையோ, பழைய இட்லியையோ நன்றியுடன் பெற்றுக்கொள்ளும் இக்காட்சி யும் நமக்கு ப் பழகிப்போனதே.

நம் நாட்டின் புண்ணிய க்ஷேத்திரங்களை நோக்கிச் செல்லும் வழிகள் முழுவதிலும் இப்பசி, பட்டினிக்காட்சிகளின் கொடுமை நம் கண்களை உறுத்துகின்றன. ஏன் ஒன்றிரண்டே நூற்றாண்டுகளுக்கு முன்பு வரையில் கூட இந்த வழிகள் தோறும் பல சத்திரங்கள் நிறைந்து விளங்கின. இந்தச் சத்திரங்கள் நடு இரவிலும் கூவி அழைத்து உணவு வழங்கிய பெருமை மிகுந்ததாகவும் வழிப்போக்கர்களின் அனாதைக் குழந்தைகளுக்கு உணவும், உணவும், உடையும் கல்வியும் பிரிவுடன் அளிக்கும் இடங்களாகவும் திகழ்ந்து வந்தன. ஆனால் தற்பொழுது இப்புண்ணிய ஸ்தலங்களும் அங்கு நம்மை கொண்டு சேர்க்கும் வழிகளும் பசியாலும் பட்டினியாலும் வாடிய முகங்களையே நம் மனதில் அழியாத சித்திரங்களாகப் பதிய வைக்கின்றன. பல கோடிக்கணக்கான யாத்திரிகர்கள் தினமும் வந்து குவியும் திருப்பதி க்ஷேத்திரத்தில், முக்கியமான தெரு ஒன்றில், ஐந்தே வயதான ஒரு குழந்தை தன்னை விடச் சிறிய இரண்டு வயது குழந்தையை ஒரு மூடிய வெற்று பால் புட்டியின் ரப்பர் சூப்பியைக் கொண்டு பசியாற்ற முயன்ற செய்கை நம் மனதை விட்டு அகலாத ஒரு அதிர்ச்சி தரும் காட்சியாகும்.

அனைத்துப் புள்ளிவிவரக் கணக்குகளும், பொது இடங்களில் நாம் காணும் அன்றாட அவலக் காட்சிகளும் பாரத நாட்டைப் பீடித்திருக்கும் கடுமையான பசிப்பிணியைச் சுட்டிக்காட்டுகின்றன. எனினும் நம் நாட்டில் போதிய அளவிலான உணவு நிறைந்துள்ளது என்றே நாம் எங்கெங்கும் பறைசாற்றி வருகிறோம். நம் பொருளாதார வல்லுநர்களும் நிபுணர்களும் 1970-களின் தொடர்ச்சியிலிருந்தே பாரதம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விளங்குகிறது என்று கூறி

வருகிறார்கள். தற்பொழுது அவர்கள் பாரதத்தில் உணவு போதுமான அளவில் மட்டுமேயன்றி, நம் தேவைக்குச் சற்று அதிகமாகவே உள்ளதென்றும் கூறுகிறார்கள். உணவை ஒரளவிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று கூறும் இந்த நிபுணர்கள் உணவு தானியம் விளையும் நிலங்களில் ஏற்றுமதி செய்யத்தக்க பயிர் வகைகளை விளைவிக்க வேண்டுமென்று வாதாடி வலியுறுத்தத் தொடங்கி உள்ளனர்.

உணவின் தன்னிறைவைப் பற்றிய இந்த வாதம், நாம் விளைவிக்கும் உணவு நம் நாட்டிற்குள்ளேயே பொருளியல் வழியால் நிர்ணயிக்கப்படும் விலைகளில் முழுமையாக விற்பனை செய்ய இயலாது என்ற காரணத்தாலேயே எழுந்துள்ளது. வாங்கும் திறன் உடையவர்க்கு உணவுப் பற்றாக்குறை எதுவுமில்லை என்பதே இவர்கள் வாதம். உணவை வாங்கும் திறனற்றவர்கள் உணவு பெற எந்த விதமான தகுதியும் உரிமையும் பெற்றவர் அல்லர் என்பதே இவர்களுடைய வாதத்தின் பொருள். கால்நடைகளுக் கொன்று உணவைச் சிறிதளவிலும் ஒதுக்காததைக் கூட இவர்கள் இதைப் போன்ற வாதங்களாலேயே விளக்குகிறார்கள். கால்நடைகளின் மாமிசத்தைப் புசிப்பவர்களே அவற்றுக்கு நன்கு உணவளிக் கிறார்கள், நாம் கால்நடைகளைப் பொருளாதாரப் பயன் கருதி வளர்ப்பதில்லையாதலால் அவற்றிற்கென உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்யத் தேவையில்லை என்பது இவர்களின் வாதம். இத்தகைய குயுக்தியான வாதங்களால் நாடெங்கும் வியாபித்துள்ள பெரும் உணவுப் பற்றாக் குறையையும் கடுமையான பசிப்பிணியையும் நாம் புறக்கணித்து வந்துள்ளோம்.

## பாரதம் எக்காலத்திலும் அன்னப் பெருக்கத்தையும் பகிர்ந்தளித்தலையும் போற்றி வந்தது

பாரதம் எல்லாக் காலங்களிலும் இவ்வாறு இருக்கவில்லை. தொன்றுதொட்டு பாரதத்தினர் மிகுதியான அன்னத்தை உற்பத்தி செய்வதிலும் அதைத் தாராளமாகப் பகிர்ந்தளிப்பதிலும் மிகுந்த சிரத்தையும் ஈடுபாடும் கொண்டு விளங்கியுள்ளனர். ஏன், வெகுசமீப காலம் வரை பாரதத்தினர் அன்னப் பெருக்கத்தை நாகரிகத்தின் ஆதாரத்தூணாகவே கருதி வந்துள்ளனர். உணவைப் பகிர்ந்துண்ணுதல் நமக்குப் பண்பட்ட நாகரிக வாழ்க்கையின் அடிப்படைக் கோட்பாடாக விளங்கியது. உண்மையில் நியமனங்களுடன் கூடிய பண்பட்ட வாழ்க்கையையே நாம் தருமம் என்று கருதுகிறோம்.

## அன்னம் பஹுகுர்வீத

உணவுப் பெருக்கம் மற்றும் பகுத்துண்ணுதலைப் பற்றிய இந்த உணர்வு பண்டைய பாரதத்தின் அடிப்படை நூல்கள் அனைத்திலும் ஆணித்தரமாய்ப் பதிக்கப்பட்டுள்ளது. மிகவும் போற்றப்படும் சுருதி கிரந்தமான தைத்திரீயோபநிஷத்து உணவைப் பற்றிய பாரதத்தினரின் இந்த உணர்விற்கு மீற முடியாத தீவிரத்துடன் வடிவமளிக்கிறது.

தைத்திரீயோபநிஷத்து பிரமவித்தையைப் பற்றியதோர் நூலாகும். ஜகத்தை படைக்கும் பிரமம் தொடக்கத்தில் இந்த ஜகத்தாகத் தன்னையே

வெளிப்படுத்தி இறுதியில் தன்னுள்ளேயே அனைத்து படைப்பையும் சுருக்கிக் கொண்டு, பின் மீண்டும் விரிந்து சுருங்குதலான அடுத்த சக்கரச் சுழற்சியைத் தொடங்குகிறது; உபநிஷத்தின் நோக்கம் பிரமவித்தையை நாடும் மாணவனான ஜிக்ஞாஸுவை பிரமத்தின் நேரடியான தரிசனத்தை, பிரமசாக்ஷாத்காரத்தை நோக்கி ஆயத்தப்படுத்தி அழைத்துச் செல்வதே. இந்த பிரமவித்தையைப் பற்றிய நூலில் அன்னமும் அன்னத்தின் வெளிப்பாடுகளும் பிரமசாக்ஷாத்காரத்தின் பாதையில் ஒவ்வொரு அடியிலும் தோன்றிய வண்ணம் உள்ளன. உண்மையில் அன்னமானது பிரமவித்தையைச் சூழ்ந்துள்ள பிராகாரத்தின் நூழைவாயிலாக விளங்குவதோடு அவ்வன்னம் கர்ப்பக்கிரத்தினுள் பிரதிஷ்டையாகி இருப்பதாகவும் விளங்குகிறது. எனவே, ஜிக்ஞாஸுவானவின் ஆசாரியர் உபதேசித்த நீண்ட பாதையில் ஒவ்வொரு அடியாக பொறுமையுடன் சென்று தரிசனத்தைப் பெற்றவுடன் அன்னத்துடன் ஒன்றிய ஆனந்தக் களிப்பில் இவ்வாறு பாடுகிறான்: 'அஹமன்னம் அஹமன்னம் அஹமன்னம்', நானே மன்னம், நானே அன்னம், நானே அன்னம்.'

இந்த இறுதி அனுபவத்தை வெளிக்காட்டுவதற்கு முன்பாக, ஆழமாகக் கற்றுணர்ந்து தரிசனத்தின் பொருட்டுக் கடுமையான முயற்சிகளுடன் ஆயத்தமாகி உள்ள ஜிக்ஞாஸுவானவன் பின்பற்றுவதற்காக உபநிஷத்து பல விரதங்களையும் மீறத் தகாத வாழ்க்கை நெறிமுறைகளையும் விதிக்கிறது. அவை பின் வருமாறு:

अन्नं न निन्द्यात्। तद्व्रतम्।।

அன்னத்தை இகழாதே. இதுவே விரதம், பிரமவித்தகர்களுக்கு இது மீறத்தகாத கோட்பாடாகும்.

अन्नं न परिचक्षीत। तद्व्रतम्।।

*அன்னத்தை ஒருபொழுதும் புறக்கணிக்காதே. இது விரதம், பிரமவித்தகர்களுக்கு இது மீறத்தகாத கோட்பாடாகும்.*

अन्नं बहु कुर्वीत। तद्व्रतम्।।

*அன்னம் அதிகமாக இருப்பதை உறுதிப்படுத்து. இது விரதம். பிரமவித்தகர்களுக்கு இது மீறத்தகாத கோட்பாடு.*

न कंचनवसतौ प्रत्याचक्षीत। तद्व्रतम्। तस्माद्यया कया च विधया
बह्वन्नं प्राप्नुयात्। आराध्यस्मा अन्नमित्याचक्षते। एतद्वै मुखतोऽन्नँ राद्धम्।
मुखतोऽस्मा अन्नँ राध्यते। एतद्वै मध्यतोऽन्नँ राद्धम्। मध्यतोऽस्मा
अन्नँ राध्यते। एतद्वा अन्ततोऽन्नँ राद्धम्। अन्ततोऽस्मा अन्नँ राध्यते।।

*உன் வீட்டு வாயிற்கதவை அணுகும் யாரையும் நீ உணவால் நிறைவு செய்யாமல், முறைப்படி விருந்தோம்பாமல், உபசாரம் செய்யாமல் திரும்ப அனுப்பாதே. இதுவே மனிதப் பிறவியின் மீறத்தகாத விரதம். பிரமவித்தகனான ஜிக்ஞாஸுவிற்கு இது மீறத்தகாத கோட்பாடு. எனவே, எவ்வாறேனும் மிகுதியான அளவில் உணவைப் பெறு. மிகுதியாக அன்னம் சமைத்து, 'இங்கு பெருமளவில் அன்னம் ஆயத்தமாகி உள்ளது. அனைவரும் வருகை தருவீராக. இந்த அன்னத்தை அனைவரும் உட்கொள்வீராக' என்று பறையறை. ஏனெனில், எவன் உணவைப் பெருமளவில் மிகுந்த மரியாதையுடனும் சிரத்தையுடனும் அளிக்கிறானோ, அவன் அதே அளவில் அதே உயர்ந்த பரிவுடன் உணவைப் பெறுவான். எவன் உணவை இடைப்பட்ட சிரத்தையுடனும் அளிக்கிறானோ, அவன் இடைப்பட்ட அளவில் அதே இடைப்பட்ட பரிவுடன் உணவைப் பெறுவான். எவன் உணவை மிகவும் ஹீனமான அளவில் அவமதிப்புடனும் சிரத்தையின்றியும் உணவளிக்கிறானோ அவன் அதே ஹீனமான அளவில் இகழ்ச்சியுடன் உணவைப் பெறுவான்.*

*அன்னப் பெருக்கம் மற்றும் பகுத்துண்ணுதல் பற்றிய தைத்திரீயோபநிஷத்தின் வரிகள் இத்துணை உறுதியுடன் உபதேசிக்கப் பட்டுள்ளன. ரிக்வேத ஸம்ஹிதை இக்கோட்பாடுகளை மேலும் கடுமையாக வலியுறுத்துகிறது.*

मोघमन्नं विन्दते अप्रचेताः। सत्यं ब्रवीमि वध इत्स तस्य।
नार्यमणं पुष्यति नो सखायम्। केवलाघो भवति केवलादी।।

அன்னத்தைத் தானம் செய்யாதவன் அன்னத்தை அடைவது வீணே. ஆங்கீரஸ ரிஷியான நான் கூறும் இது சத்தியம். இத்தகையவன் பெறும் அன்னம் வெறும் வீண் மட்டுமல்ல, அது அவனுக்கு மரணத்தைப் போன்றதே. அந்த அன்னத்திலிருந்து அவன் தேவர்களுக்கு அர்ப்பணம் செய்வதும் இல்லை. அல்லது தன் இல்லத்தின் வாயிலுக்கு வருகை தரும் அதிதிகள் மற்றும் நண்பர்கள், உறவினர்களுக்கு விருந்து அளிப்பதும் இல்லை. இவ்வாறு தான் மட்டுமே அன்னத்தை உண்ணும் அஞ்ஞானி நிச்சயம் பாவத்தையே உண்கிறான்.

கிருஷ்ணயஜுர்வேதத்தின் சாகையான தைத்திரீய பிராமணத்தில், அன்னத்தைத் தன் இருப்பிடமாய்க் கொண்டுள்ள அன்னதேவதையே அன்னத்தின் முக்கியத்துவத்தையும் உண்பதற்கு முன் அன்னத்தை அளிக்க வேண்டிய மீற முடியாத கோட்பாட்டையும் உபதேசிப்பதைக் காணலாம். அங்கு அன்னதேவதையின் கோஷணமாவது :

अहमस्मि प्रथमजा ऋतस्य। पूर्वं देवेभ्यो अमृतस्य नाभिः।
यो मा ददाति स इदेव माऽऽवाः। अहमन्नमन्नमदन्तमद्मि।।

அன்னதேவதையாகிய நானே யக்ஞத்தை முதலில் தோற்றுவிப்பவன்; எல்லாவற்றிற்கும் முன்பாக யக்ஞம் என்னிலிருந்தே உண்டாகிறது. நானே சிருஷ்டியின் தொடக்கத்தில் தேவர்களுக்கு அமிர்தத்தின் மூலப்பொருளாகிறேன். என்னிடமிருந்தே தேவர்களுக்கு அமிர்தமானது கிடைக்கப் பெருகிறது.

யார் என்னைத் தானம் செய்கிறார்களோ நிச்சயமாக அவர்களே என்னை அடைவார்கள். யார் என்னை மற்றவர்களுக்கு அளிக்காது தானே நுகர்கிறார்களோ அவர்களை நான் நாசம் செய்து விடுவேன். அன்னதேவதையான நான் அன்னதானம் செய்யாதவர்களை விழுங்கி விடுகிறேன்.

அன்னத்தை மிகுதியாக உற்பத்தி செய்து உதாரமாக அவ்வன்னத்தைப் பகிர்ந்தளிப்பதைப் பற்றி சுருதியின் அங்கமான ரிக்வேதம், தைத்திரீய பிராமணம் மற்றும் தைத்திரீயோபநிஷத்து முதலானவை உபதேசித்துள்ளவற்றை ஸ்ம்ருதி நூல்களான மஹாபாரதம், இராமாயணம், தவிர, வெவ்வெறு காலம் மற்றும் சாதியைச் சார்ந்த

பல்வேறு புராணங்கள் மற்றும் தரும சாஸ்திரங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன.

மஹாபாரதம் அன்னத்தின் மகிமையைப் பற்றியும் அன்ன தானத்தின் பெருமையைப் பற்றியும் மிக உறுதியுடன் உபதேசிக்கிறது. மஹாபாரத யுத்தத்திற்குப் பிறகு குருவம்சத்தில் மூத்தவரும் மதி நுட்பம் வாய்ந்தவருமான பீஷ்மபிதாமஹர் யுதிஷ்டிரருக்கு தருமத்தின் அனைத்துக் கூறுகளையும் பற்றிய நுணுக்கமான விவரங்கள் அடங்கிய நீண்டதோர் உபதேசம் வழங்குகிறார். 25,000 சுலோகங்கள் நீண்ட இந்தப் பேருரை கிட்டத்தட்ட மஹாபாரதத்தில் நாலில் ஒரு பகுதியாய் விளங்குகிறது. இந்த மாபெரும் தருமப்பிரவசனம் நிறைவேறிய உடன் பீஷ்மபிதாமஹர் தம் பூத உடலைத் துறக்கிறார். அதன் பின், ஸ்ரீகிருஷ்ணர் மற்றும் மஹரிஷி வியாசர் ஆகியோரால் தூண்டப்பட்டு யுதிஷ்டிரர் ஓர் அசுவமேத யக்ஞத்தை மேற்கொள்கிறார். யக்ஞத்தை நிறைவேற்றி, இத்தகைய பெரும் யக்ஞத்திற்கான முயற்சிகளிலிருந்தும் பொறுப்புகளிலிருந்தும் விடுபட்ட பின் யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணரிடம் தமக்கு பீஷ்மபிதாமஹரின் பூரண போதனையின் சாராம்சத்தைக் கூறுமாறு வேண்டுகிறார். யுதிஷ்டிரரின் வேண்டுதலுக்கு இணங்கிய ஸ்ரீகிருஷ்ணர் ஒரு பதினைந்து சுலோகங்களில் பிதாமஹரின் உபதேசச் சாரத்தை வழங்குகிறார். இதில் முதல் பத்து சுலோகங்கள் ஒரு இல்லறத்தானின் வாழ்க்கையில் அன்னதானம் வகிக்கும் மையத் தன்மையை, உணவு அளிப்பதின் பெருமையை எடுத்துரைக்கின்றன. அடுத்த ஐந்து சுலோகங்கள் உணவின் பெருமையையும், ரசகர்ப்பமான பூமியிலிருந்து அது தோன்று தலையும் அனைத்து உயிர்களுடன் அதற்குள்ள நெருங்கிய தொடர்பையும் விளக்குகின்றன.

ஸ்ரீகிருஷ்ணர் யுதிஷ்டிரருக்கு பீஷ்மபிதாரஹருடைய போத னையின் சாரமாக உபதேசிக்கும் முதல் சுலோகம்.

> अन्नेन धार्यते सर्वं जगदेतच्चराचरम्।
> अन्नात् प्रभवति प्राणः प्रत्यक्षं नात्र संशयः।।

> உலகம் அனைத்தும் உணவையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. உணவிலிருந்தே உயிர் உண்டாகிறது; இது வெளிப்படை, இதில் எந்த சந்தேகமும் இல்லை.

மேலும், ஸ்ரீகிருஷ்ணர் அன்னதானத்தைப் பற்றிய தம்முடைய உபதேசத்தை முடிக்கையில் இவ்வாறு கூறுகிறார்:

अन्नदः प्राणदो लोके प्राणदः सर्वदो भवेत्।
तस्मादन्नं विशेषेण दातव्यं भूतिमिच्छता।।

*உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே; மற்றும் அன்னத்தையும் கொடுத்தவராவர். எனவே இகபர உலகில் சுகத்தை விரும்புவோர் உணவளிக்க பிரத்யோக முயற்சி மேற்கொள்ள வேண்டும்.*

*ஸ்ரீமத் பவிஷ்ய புராணத்தில், அன்னதான மாகாத்மியத்தைப் பற்றிய அத்தியாயத்தில், மஹாபாரதத்தில் உள்ள சம்பவத்தை நினைவுபடுத்தியவாறே ஸ்ரீகிருஷ்ணரின் மிகச் சுருக்கமான ஆனால் உறுதியான கட்டளை இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது:*

ददस्वान्नं ददस्वान्नं ददस्वान्नं युधिष्ठिर।।

*அன்னமளி, அன்னமளி, அன்னமளி யுதிஷ்டிரா!*

*பீஷ்மபிதாமஹரே தம்முடைய நீண்ட பிரவசனத்திலும், தவிர மஹாபாரதத்தில் மற்ற பல்வேறு இடங்களிலும் யுதிஷ்டிரருக்கு பொதுவாக மற்றவர்களுக்கு அன்னமளிக்க வேண்டியதன் முக்கியத் துவத்தையும் மற்றும் குறிப்பாக வேளாண்மையைப் பாகாக்க வேண்டிய ஒர் அரசனது கடமையையும் மீண்டும் மீண்டும் உபதேசிக்கிறார். ஒரு அரசனானவன் தன் ராஜ்யத்தில் உழவர்கள் அநியாயமான வரிச்சுமையால் துன்பத்திற்கு உள்ளாக்கப்படாதிருப்பதையும், அவர்களின் நீர்ப்பாசனம் மழைக் கடவுளின் கருணைக்கு மட்டுமே விட்டு வைக்கப் படாதிருப்பதையும் நிச்சயித்துக் கொண்டு இவற்றால் மிகுதியான உணவு எங்கெங்கும் உற்பத்தியாகி யாரும் எங்கும் பசிப்பிணியால் வருந்தா வண்ணம் ஆட்சி செய்ய வேண்டும் என்பதே பீஷமரின் உபதேசம். இதுவே ஸ்ரீராமர் தம்முடைய நீண்ட வனவாசத்தின் தொடக்கத்தில், சித்ர கூடத்தில் தம்மைக் காண வந்த பரதனிடம் கோசல நாட்டு நலைனைப் பற்றி விசாரிக்கையில், அவனுக்கு வழங்கும் உபதேசமும் கூட.*

*ஏன் பாரதத்தினரின் சிந்தனையில் இலட்சியமாய் ஒளிரும் இராமராஜ்யத்தைப் பற்றிய வருணனைகள் அனைத்தும் செழிப்பான வயல்களின் அமோக விளைச்சலையும், உலகெங்கும் பசி தாகத்தின் இல்லாமயையும் மற்றும் பூமி முழுவதிலும் யாவரும் வியாதிகள் மற்றும் குற்றங்களிலிருந்து விடுபட்டு இருப்பதையுமே இராமராஜ்யத்தின் இலக்கணமாய்ப் போற்றுகின்றன. இவ்வாறு, ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் தொடக்கத்திலேயே பால காண்டத்தின் முதல்*

*அத்தியாயத்தில், மஹரிஷி வால்மீகி நிகழப் போகும் இராமராஜ்யத்தை பின் வருமாறு வருணிக்கிறார்.*

प्रहृष्टमुदितो लोकस्तुष्टः पुष्टः सुधार्मिकः।
निरामयो ह्यरोगश्च दुर्भिक्षभयवर्जितः।
न पुत्रमरणं केचिद् द्रक्ष्यन्ति पुरुषाः क्वचित्।
नार्यश्चाविधवा नित्यं भविष्यन्ति पतिव्रताः।
न चाग्निजं भयं किंचिन्नाप्सु मज्जन्ति जन्तवः।
न वातजं भयं किंचिन्नापि ज्वरकृतं तथा।
न चापि क्षुद्भयं तत्र न तस्करभयं तथा।
नगराणि च राष्ट्राणि धनधान्ययुतानि च।
नित्यं प्रमुदिताः सर्वे यथा कृतयुगे तथा।।

*ஸ்ரீராமரின் ராஜ்யத்தில் அனைத்து மக்களும் சந்தோஷத்துடனும், சுகத்துடனும் வாழ்கின்றனர்; நல்லூட்டம் பெற்றவராய் விளங்குகின்றனர்; அனைவரும் தார்மீக வாழ்க்கையிலேயே நிலைபெற்று இருக்கின்றனர்; எப்பொழுதும் எல்லோரும் நலமுடனும்; எவ்விதத்திலும் எந்த வியாதியும் அணுகாது வாழ்கின்றனர்; பஞ்சம் பற்றாக்குறை இவற்றின் பயம் ஒருபொழுதும் அவர்களிடம் தென்படவில்லை.*

*எந்த பெற்றோரும் குழந்தை இறப்பதைப் பார்க்கவில்லை. எந்த ஸ்திரீயும் புருஷனின் மரணத்தைக் காணவில்லை. எல்லா ஸ்திரீகளும் எப்பொழும் பதிவிரதா தருமத்தைக் கடைப்பிடித்து ஒழுகினர்.*

*அங்குத் தீயினால் ஒருவருக்கும் கேடு விளையவில்லை. யாருக்கும் நீரால் விபத்தொன்றும் நேரவில்லை; காற்று தூய்மை உடையதாய் இருந்தது. எந்த ஜுரத்தின் பயமும் அவர்களை அணுகவில்லை. பசியைப் பற்றிய கவலை ஒருவருக்கும் இருக்கவில்லை. ஒருபொழுதும் எங்கும் எதுவும் களவாடப்படவில்லை.*

*நாடு நகரங்கள் தனதானியங்களால் நிரம்பி வழிந்தன. எல்லோரும் எப்பொழுதும் நிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் இருந்தனர். இராமராஜ்யத்தில் சத்ய யுகமே மீண்டும் திரும்பியது போல் தோன்றியது.*

*இராமராஜ்யத்திற்கு எதிர்மாறாக விளங்குவது காலத்தின் இறுதியான யுகக்ஷய காலம். பாரதத்தின் நோக்கில், காலங்கள் முடிவுறும் இச்சமயத்தில் உணவு மிக அரியதாகி, நாட்டில் மக்கள் உணவையே விற்கும் நிலைக்கு ஆளாகி விடுவர். உணவும், நீரும், உறைவிடமும் நாடி வருபவருக்குக் கூட மறுக்கப்பட்டு, அவர்கள் பசியுடனும் தாகத்துடனும் பாதைகளில் கிடைக்கக் கடவர். இத்தகையதொரு காலத்தை யுதிஷ்டிரருக்கு, அவருடைய வனவாசத்தின் போது, வருணிக்கும் மார்க்கண்டேய முனிவர் இவ்வாறு கூறுகிறார்.*

अट्टशूला जनपदाः शिवशूलाश्चतुष्पथाः।
केशशूलाः स्त्रियश्चापि भविष्यन्ति युगक्षये।।

*யுகக்ஷய காலத்தில் நாடெங்கும் மக்கள் அன்னத்தையும், பிராமணர்கள் வேதத்தையும் ஸ்திரீகள் தம் சரீரத்தையும் விற்கக்கூடிய நிலைக்குத் தாழ்த்தப்படுவர்.*

युगान्ते हुतभुक् चापि सर्वतः प्रज्वलिष्यति।
पानीयं भोजनं चापि याचमानास्तदध्वगाः।
न लप्स्यन्ते निवासं च निरस्ताः पथि शेरते।।

*கலியுகம் முடிவுறும் காலத்தில் எப்புறமும் அனைத்தையும் விழுங்கக் கூடிய ஒரு மாபெரும் அக்னி உருவாகி கொழுந்து விட்டெரியும். அந்தச் சமயத்தில் யாசிக்கும் வழிப்போக்கர்களுக்கு ஒருவரும் உணவோ நீரோ அளிக்க மாட்டார்கள். இவ்வாறு எல்லாப் பக்கங்களிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டு ஆதாரவின்றி அவர்கள் பாதைகளி லேயே விழுந்து கிடைப்பார்கள்.*

*ஓர் அரசனின் ஆட்சியில் காலம் இத்தகையதோர் அவலநிலையை அடைவதைப் போன்ற காடிய பாவம் வேறு இல்லை என்றே கூறலாம். இவ்விஷயத்தைப் பற்றி ஆபஸ்தம்ப தர்ம சூத்திரம் உறுதியுடன் கட்டளையிடுவதாவது, ஒரு அரசின் முக்கிய கடமை அவன் தன் எல்லைக்குள் யார் ஒருவரும் பசி, தேவை அல்லது அடையவிலாத நிலைமை, இவற்றால் வருந்தாதிருப்பதை நிச்சயித்துக் கொள்வதேயாம்.*

न चास्य विषये क्षुधा रोगेण हिमातपाभ्यां वाऽवसीदेदभावाद्बुद्धिपूर्वं वा कश्चित्।।

*இவன் ராஜ்யத்தில் பசி, நோய் கடும் குளிர், வெப்பம் ஆகியவற்றால் எவரும் வருந்தக் கூடாது. ராஜ்யத்தில் பொதுவான பற்றாக்குறையின் காரணத்தாலோ அல்லது குறிப்பாக ஒருவருக்கு*

*அளிக்கப்பட்ட தண்டனை போன்றவற்றாலோ யாரும் இத்தகைய பசி, நோய், குளிர், வெப்பம் போன்ற துன்பங்களால் வருந்தக் கூடாது.*

*பீஷ்மபிதாமஹர், மஹாபாரதத்தின் அனுசாஸன பர்வத்தில் ஓர் சுருக்கமான ஆனால் பொருளாழம் மிகுந்த அத்தியாயத்தில், ஒரு ராஜ்யத்தில் ஒரே ஒருவனுடைய பசிப்பிணி கூட அவ்வரசனை அழிக்கவல்லது என்று கூறி யுதிஷ்டிரரை எச்சிரிக்கிறார். எந்த ஒரு அரசனது ராஜ்யத்தில், சிறு குழந்தைகள் மற்றவர்களின் சுவையான உணவை ஆவலுடன் பார்த்து நிற்க, அதே உணவு அச்சிறுவர்களுக்கு முறையாக பேணிப் போற்றி அளிக்கப்படாத நிலைமை உள்ளதோ அத்தகைய அரசன் மற்றும் அவன் ராஜ்யம் எவ்வித நன்மையையும் அடையாது. பீஷ்மபிதாமஹரின் வரிகளில்:*

रौद्रं कर्म क्षत्रियस्य सततं तात वर्तते।
तस्य वैतानिकं कर्म दानं चैवेह पावनम्।।

*பிள்ளாய் யுதிஷ்டிரா! ஒரு க்ஷத்திரியன் இடையறாமல் மிகக் கடுமையான மற்றும் வன்மையான கருமங்களில் ஈடுபட வேண்டியுள்ளது. அவனுடைய இந்த தோஷமானது தாராளமாக தானங்கள் செய்வதாலும் வைதிக யக்ஞங்களை நிறைவேற்று வதாலும் மட்டுமே நீங்கும்.*

वृद्धबालधनं रक्ष्यमन्धस्य कृपणस्य च।
दद्याच्च महतो भोगान् क्षुद्भयं प्रणुदेत् सताम्।
येषां स्वादूनि भोज्यानि समवेक्ष्यन्ति बालकाः।
नाश्नन्ति विधिवत् तानि किं नु पापतरं ततः।
यदि ते तादृशो राष्ट्रे विद्वान् सीदेत् क्षुधा द्विजः।
भ्रूणहत्यां च गच्छेथाः कृत्वा पापमिवोत्तमम्।
धिक् तस्य जीवितं राज्ञो राष्ट्रे यस्यावसीदति।
द्विजोऽन्यो वा मनुष्योऽपि शिबिराह वचो यथा।
यस्य स्म विषये राज्ञः स्नातकः सीदति क्षुधा।
अवृद्धिमेति तद्राष्ट्रं विन्दते सहराजकम्।
क्रोशन्त्यो यस्य वै राष्ट्राद्ध्रियन्ते तरसा स्त्रियः।
क्रोशतां पतिपुत्राणां मृतोऽसौ न च जीवति।।

அரசனானவன் வயோதிகர்கள், குழந்தைகள், ஏழைகள் மற்றும் குருடர்களுடைய செல்வத்தை விசேஷமாகப் பாதுகாக்க வேண்டும். தன்னுடைய துக்கத்தால் அழுது கொண்டிருக்கும் எந்த அபலையியிடமிருந்தும் அரசன் ஒருகாலும் எவ்வித செல்வத் தையும் எடுக்கக் கூடாது. தவிர, தாமே முயன்று கிணறு வெட்டி பாசன வசதி செய்து உழவுத் தொழிலில் ஈடுப்பட்டுள்ள உழவர்களிடமிருந்தும் எவ்வித செல்வத்தையும் கொள்ளுதல் கூடாது.

ஏழைகளிடமிருந்து செல்வத்தைப் பிடுங்கும் அரசன், தானே நலிவுற்றவனாகி விடுவான். மேலும் தன் நாட்டின் அழிவுக்கும் காரணமாவான். எனவே ஏழைகளின் செல்வத்தை அபகரிப்பதை விடுத்து அரசன் அவர்களுக்குப் பெருமளவில் செல்வங்களையும், போகங்களையும் வழங்க வேண்டும். தன் ராஜ்யத்தில் உள்ள நற்பிரஜைகள் அனைவருக்கும் எவ்வித பசிப்பிணியும் பயமும் இல்லாதவாறு ராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டும்.

எப்பொழுது சிறுவர்கள் பிறர் சுவையான உணவை உண்பதை ஆவலுடன் பார்த்து நிற்க, அவ்வுணவு அச்சிறுவர்களுக்கு முறைப்படி வழங்கப்படாத நிலைமை உண்டாகிறதோ, அதைவிட பயங்கரமான பாவம் வேறு என்ன இருக்க முடியும்?

ராஜா யுதிஷ்டிரா! உன் ராஜ்யத்தில் வித்வானான துவிஜர் யாரேனும் பசிப்பிணியால் துன்புற நேர்ந்தால் நீ கர்ப்பத்தைக் கலைத்ததற்கு ஒப்பான பாவத்தை அடைவாய். மேலும் மகாபாவிகளுக்கு உரிய அதோகதியையும் அடைவாய். ராஜா சிபி கூறியுள்ளவாறு, எந்த அரசனின் ராஜ்யத்தில் யாரேனும் ஒரு துவிஜர், ஏன், யாரேனும் ஒரு மனிதர் பசியால் பீடிக்கப்படும் நிலையை அடைய நேர்ந்தாலும் அந்த அரசன் பழிக்கப்படுவான். அத்தகைய அரசன் உயிர் வாழ்வதும் வீணே.

ஒர் அரசனின் ராஜ்யத்தில் யாரேனும் ஒரு ஸ்நாதகன், அத்தியனம் முடித்த பிரம்மச்சாரி, ஒருவர் பசியினால் துன்புற நேர்ந்தாலும் கூட அந்த ராஜ்யம் அவல நிலையை அடையும். இத்தகையதொரு ராஜ்யம் அந்நிய அரசர்களன் ஆதிகத்தின் கீழ் அடிமைப்படுவது நிச்சயம்.

எந்த அரசனின் ராஜ்யத்தில் கதறி அழும் பெண்கள் பலாத்கார மாகக் கடத்தப்பட்டு, அவர்களுடைய புருஷர்களும் புதல்வர்

*களும் உதவிக்கு யாருமில்லாமல் கதறி அழுகிறார்களோ, அத்தகைய அரசன் இறந்தவனுக்குச் சமம். நிச்சயம் அவனை உயிர் உள்ளவனாகக் கருத முடியாது.*

*மேலும் பீஷ்மர் இவ்வாறு கூறுகிறார்:*

अरक्षितारं  हर्तारं विलोप्तारमनायकम्।
तं वै राजकलिं हन्युः प्रजाः सन्नह्य निर्घृणम्।
अहं वो रक्षितेत्युक्त्वा यो न रक्षति भूमिपः।
स संहत्य निहन्तव्यः श्वेव सोन्माद आतुरः।।

*எந்த அரசன் பிரஜைகளையும் மற்றும் நாட்டையும் பாதுகாப்பதில்லையோ, எவன் பிரஜைகளிடமிருந்து அநியாயமாக செல்வத்தை அபகரிக்கிறானோ, எவன் பிரஜைகளின் பிழைப்பிற்கான சாதனங்களின் பற்றாக்குறைக்குக் காரணமாகிறானோ, எவன் பிரஜைகளுக்குத் தலைவனாய்த் திகழ்வதில்லையோ. அத்தகையதொரு அரசன் நிச்சயம் கலிக்குச் சமமானவனே. பிரஜைகள் அந்த அரசனைச் சூழ்ந்து கொண்டு கொல்ல வேண்டும்.*

*'நான் உங்களைப் பாதுகாப்பேன்' என்று வாக்களித்து எந்த அரசன் பாதுகாக்கவில்லையோ அத்தகைய அரசன் வெறி பிடித்த நாயைப் போல் பிரஜைகளால் கொல்லத் தகுந்தவனே.*

*உணவின் நிறைவையும், பசி, தேவை இவற்றின் இல்லாமையையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு பெரும்பாலும் அரசனைச் சார்ந்ததே என்றாலும், உண்மையில் இந்தச் சுமையில் பங்கேற்க வேண்டிய கடமை நியமத்துடன் வாழும் கிருகஸ்தர்கள் அனைவரும்க்கும் உரியதே. பாரதீய சிந்தனையின்படி ஒவ்வொரு இல்லறத்தானும் தன் எல்லைக்குள் ஒரு அரசனாகவே விளங்குபவன். தன் பராபரிப்பிற்குள் உள்ள அனைவரும் பசியாலும் தேவைகளாலும் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது ஒவ்வொரு சாதாரண கிருகஸ்தனுக்கும் கடமையாகவே விதிக்கப்பட்டுள்ளது. ஏன், பாரதீய சனாதன கோட்பாட்டின்படி ஒவ்வொரு கிருகஸ்தனும் பித்ருக்களையும் இயற்கையின் வெவ்வேறு தேவர்களையும் திருப்தி செய்து, படைப்பின் எல்லா உயிர்களின் பிரதிநிதிகளாக விளங்கும் பூதங்களுக்கு அவர்களின் பங்கையளித்து, வீட்டு வாயிலில் காணப்படும் அதிதிகளையும் விருந்தினர்களையும் திருப்தி செய்து, வீட்டின் பணியாட்கள் மற்றும் தன் பராமரிப்பிற்குட்பட்ட அனைவரையும் உணவால் திருப்தி செய்து*

*பின்னரே தான் உணவு உட்கொள்ள முறையான தகுதியைப் பெறுகிறான். பாரதீய மரபின் மிகுந்த அதிகாரபூர்வமான தருமசாஸ்திரமாகக் கருதப்படும் மனுஸ்ம்ருதி, ஒருவன் தான் உணபதற்கு முன் மற்றவர்க்கு உணவளித்து பேணிப் போற்றுவதான இந்த நித்தியக் கோட்பாட்டைக் கிட்டத்தட்ட இருநூறுக்கும் மேற்பட்ட சுலோகங்களில் வரையறுக் கிறது. இக்கோட்பாட்டை தொகுத் தளித்து ஸ்ம்ருதி இவ்வாறு கூறுகிறது.*

देवानृषीन्मनुष्यांश्च पितॄन्गृह्याश्च देवताः।
पूजयित्वा ततः पश्चाद् गृहस्थः शेषभुग्भवेत्।
अघं स केवलं भुङ्क्ते यः पचत्यात्मकारणात्।
यज्ञशिष्टाशनं ह्येतत्सतामन्नं विधीयते।।

*தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள், பூதங்கள் மற்றும் மனிதர்களுக்கு விதிமுறைப்படி அன்ன சமர்ப்பணம் செய்த பிறகு, எஞ்சிய அன்னத்தை மட்டும் உண்பதே கிருஸ்தனுக்குத் தகுந்த செயல். எந்தக் கிருஸ்தன் தனக்கென மட்டுமே போஜனம் செய்து கொள்கிறானோ அவன் உண்பது உணவை அல்ல, பாவத்தையே. ஏனெனில் நல்லோருக்குப் பஞ்சமகாயக்ஞத்தை நிறைவேற்றிய பின் எஞ்சியுள்ள அன்னமே உட்கொள்ளத் தகுந்த உணவென விதிக்கப்பட்டுள்ளது.*

*அன்னப் பெருக்கத்தை ஏற்படுத்தி அன்னத்தை தாராளமாய்ப் பகுத்தளிக்கும் கோட்பாட்டின் மீது பாரத மக்களுக்கு உரிய பிடிப்பு இத்துணை ஆழமாகவே பதிக்கப்பட்டுள்ளது. உண்மையில், ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீமத் பகவத்கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில், அன்னப் பெருக்கம் மற்றும் அன்னதானத்தைப் பற்றிய கோட்பாடுகளின் முழு சாராம்சத்தையும் ஒரு ஏழு சுலோகங்களிலேயே உபதேசிக்கிறார். ஸ்ரீகிருஷ்ணரின் உபதேசமானது:*

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः।
अनेन प्रसविष्यध्वमेष वोऽस्त्विष्टकामधुक्।।

*ச்ருஷ்டியின் தொடக்கத்தில் பிராஜாபதி, யக்ஞத்தையும் பிரஜைகளும் ஒன்றாகப் படைத்து விட்டு பிரஜைகளை இவ்வாறு ஆசீர்வதிக்கிறார்: இந்த யக்ஞத்தின் மூலமாக விருத்தியடையுங் கள். இந்த யக்ஞம் உங்களது 'இஷ்டகாமதுக்' ஆக இருக்கட்டும். உங்கள் எண்ணங்களையும் இச்சைகளையும் பூர்த்தி செய்வதாய் விளங்கட்டும்.*

देवान् भावयितानेन ते देवा भावयन्तु वः।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ।

*இந்த யக்ஞத்தின் மூலமாக தேவர்களைத் திருப்திப் படுத்துங்கள் தேவர்கள் உங்களைத் திருப்திப்படுத்தட்டும். இவ்வாறு ஒருவரை யொருவர் திருப்தி செய்வதன் மூலம், மனிதர்களும் தேவர்களுமான நீங்கள் இருவரும் பரம சிரேயசை, மிகச் சிறந்த போன்றை அடையுங்கள்.*

इष्टान्भोगान् हि वो देवा दास्यन्ते यज्ञभाविताः।
तैर्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः।

*யக்ஞத்தால் பூரிப்படைந்த தேவர்கள் மனிதர்களுக்கு அவர்கள் விரும்பிய போகங்களை வழங்குகின்றனர். எனவே தேவர்களால் அளிக்கப்பட்ட இந்த போகங்களை அவர்களுக்கு மீண்டும் சமர்ப்பிக்காமல் தானே அனுபவிப்பவன் ஒரு கள்வனே.*

यज्ञशिष्टशिनः सन्तो मुच्यन्ते सर्व किल्बिषैः।
भुञ्जते ते त्वघं पापाः ये पचन्त्यात्मकारणात्।

*சிருஷ்டியின் அனைத்து அம்சங்களுக்கு உரித்தான பங்கை அளித்த பின் எஞ்சிய அன்னத்தை அதாவது யக்ஞசிஷ்ட அன்னத்தை உண்பவர் சால்புடையோர். அவர்கள் எல்லாப் பாவங்கலிருந்தும் விமோசனம் அடைவர். தனக்கு மட்டும் சமைத்துண்பவர்கள் மகாபாவிகள்; அவர்கள் உண்பது பெரும் பாவத்தையேயாம்.*

अन्नाद् भवन्ति भूतानि पर्जन्यादन्नसंभवः।
यज्ञाद्भवति पर्जन्यो यज्ञः कर्मसमुद्भवः।

*அனைத்துயிர்களும் அன்னத்திலிருந்து உற்பத்தியானவே; அன்னம் மழையால் உற்பத்தியாகிறது; மழை யக்ஞத்தால் சம்பவிக்கிறது. யக்ஞமாவது கருமத்தால், நற்காரியத்தால் உண்டாகிறது.*

कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्माक्षरसमुद्भवम्।
तस्मात्सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम्।

*அர்ஜுனா வேத ரூபமான பிரமத்திலிருந்து கருமம் உண்டாகிறது என்று அறிந்து கொள்; வேத ரூப பிரமம், அட்சரத்தால்,*

அழிவில்லாத பரம புருஷனுடைய முதல் மூச்சால் உண்டாகிறது. ஆகவே பிரமம் எல்லா இடத்திலும் வியாபித்திருந்தாலும் யக்ஞத்தில் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கிறது என்று அறிந்து கொள்வாயாக.

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः।
अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति।।

இதுவே பிரமனால் உருவாக்கப்பட்ட பரஸ்பரம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளும் சிருஷ்டி சக்கரம். யார் ஒருவன் பிரமனால் இயக்கப்பட்ட இந்தச் சக்கரத்தை அனுசரித்து செயலாற்றவில்லையோ அவன் பாவியே. அவன் வெறும் புலன்களின் சுகத்தில் மூழ்கியவன். ஓ! பார்த்தா! இத்தகையவனுடைய வாழ்வு வீணானதே.

## தமிழ் இலக்கியத்தில் போற்றப்படும் அன்னப்பெருக்கம் மற்றும் பகிர்ந்தளிக்கும் சனாதன தருமம்.

இதுவரை அன்னப்பெருக்கம் மற்றும் பகிர்ந்துண்ணுதல் என்னும் பாரதீய கோட்பாடுகள் பற்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ள மேற்கோள்கள் மற்றும் விளக்கங்கள் அனைத்தும் நம் புராதன இலக்கியங்களான வேதங்கள், இதிகாசங்கள் மற்றும் புராணங்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளவை. இவ்வாறே உணவின் பெருமை, உணவைப் பெருக்குவதன் முக்கியத்துவம், ஈத்துண்ணும் கோட்பாடு என்னும் நம் சனாதன பாரதப் பண்பாடு தமிழ் இலக்கியத்தில் தொன்றுதொட்டு மிகவும் போற்றப்படுவது அனைவரும் அறிந்ததே.

தமிழ் இலக்கியத்தில் பகுத்துண்ணுதலைப் பற்றிய வருணைகளில், மணிமேகலையில் கூறப்படும் ஆபுரத்திரனின் கதை மிகவும் சிறப்பானது. பௌத்த சமயக் காப்பியமான மணிமேகலையின் பாத்திரமான ஆபுத்திரன் பிறந்த உடனேயே தன் தாயால் ஒரு தோட்டத்தில் தனித்து விடப்பட, ஒரு பசு ஏழு நாட்கள் வரை பாதுகாத்து பின்பு மக்கட்செல்வம் இல்லாத ஒரு அந்தண தம்பதியினர் அவனை வளர்க்க அந்தணர்களின் சூழலில் வளர்ந்தான் ஆபித்திரன். பின்பு சூழ்நிலை காரணமாக அவ்வூரை விட்டு தென்மதுரையை அடைந்தான்.

ஆபுத்திரன் தென்மதுரையில் சிந்தாதேவியின் அருளால் ஒரு அட்சயபாத்திரத்தை வரமாகப் பெற்று மன்னுயிர் ஓம்பினான். ஆனால்

*இந்திரனின் பொறாமைக் காரணமாக அன்னத்தை பகிர்ந்துண்ணும் மீறத்தகாத கோட்பாட்டை அவ்விடத்தில் கடைப்பிடிக்கவியலாது வருந்தினான். பிறகு சாவக நாடு பசிக் கொடுமையால் துன் புறுவதைக்கேட்டு அங்குச் செல்லும் பொருட்டு கடல் பயணம் மேற்கொணடான். ஆனால் விதி வசத்தால் மனித சஞ்சாரமற்ற ஒரு தீவினுள் தனித்து விடப்பட்டான்.*

*ஆபுத்திரனிடம் சிந்தாதேவி அளித்த அட்சயபாத்திரம் இருந்தது. ஆனால் அத்தீவில் வாழ்வோர் யாரும் இல்லை. பின் மற்றவர்க்கு உணவிடாது அத்தெய்வீகப் பாத்திரத்தினின்றும் ஆபுத்திரனால் எங்ஙனம் தான் மட்டும் உண்ண இயலும்? ஆபுத்திரன் இவ்வாறு எண்ணினான்.*

மன்னுயி ரோம்புமிம் மாபெரும் பாத்திரம்
என்னுயி ரோம்புதல் யானோ பொறேஎன
தவந்தீர் மருங்கிற் றனித்துய ருழந்தேன்
சுமந்தென் பாத்திரம்

*மற்றவர்களுக்கு உணவளித்துப் பேணிப் பாதுகாக்க முடியாதெ னில் அப்பாத்திரத்தினால் என்னுயிரை மட்டுமே பேணி வளர்ப்பதை நான் ஏற்க முடியாது. நான் செய்த தவப்பயன் முடிந்துவிட்டது போலும். நான் தனியனாகி விட்டேன். இனி இப்பாத்திரத்தை நான் சுமத்தல் வீணே.*

*இவ்வாறு எண்ணிய ஆபுத்திரன் தெய்வீகமான அப்பாதிரத்தை கோமுகிப் பொய்கையில் விட்டுவிட்டு, உண்ணாநோன்பு ஏற்று அம்மணிபல்லவத்தீவிலேயே உயிர் துறந்தான்.*

*அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரம் தன் வசம் இருந்தும் பகுத்துண்ணும் தருமத்தைத் தன் உயிரினும் மேலாய்க் கருதிய அப்பெருமகன் அட்சயபாத்திரத்திலிருந்து ஒருவருக்கும் உணவிட முடியாத சூழவில் தான் மட்டும் தனித்து உண்ணுவதற்கு மனமன்றி உயிர் துறப்பதே மேலென எண்ணினான். ஈத்துண்ணும் நெறியினின்றும் பிறழ்தலை விட இன்னுயிர் நீத்தலே பெருமை என்பதை உலகுக்கு உணர்த்துகிறது ஆபுத்திரனின் கதை.*

*மணிமேகலையோ கால வரம்பற்ற வேத உபநிஷத்துகள் மற்றும் இதிகாசங்களிலிருந்து மிகவும் பிற்பட்ட சரித்திர காலத்தைச் சேர்ந்த*

நூலாகும். இந்நூலாசிரியர் இக்காப்பியத்தை வைதிக பரம்பரையிலிருந்து வேறுப்படுத்தி பௌத்த சமய உண்மைகளையும் நீதிகளையும் போற்றும் நூலாக படைத்துள்ளது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு பௌத்த சமயத்தைச் சார்ந்த காப்பியமான மணிமேகலையில் தனிச்சிறப்புடன் வருணிக் கப்பட்டுள்ள ஆபுத்திரனின் அருஞ்செயல், தான் உண்பதற்கு முன் மற்றவர்க்கு பங்களிக்கும் கோட்பாட்டைப் பின்பற்றுவதிலுள்ள தீவிரத்தால் தன்னையே தியாகம் செய்த தவச் செயல், மஹாபாரதத்தில் ஆசுவமேதிக பர்வத்தில் வருணிக்கப்படும் குருக்ஷேத்திரத்து உஞ்சவிருந்தி பிராமணரின் தியாகச் செயல் மற்றும் சாந்தி பர்வத்தில் வருணிக்கப்படும் புறாவின் ஆத்ம தியாகம், இவற்றிற்கு ஒப்பாகவே விளங்குகிறது.

ஆபுத்திரனைப் பற்றிய மனதைத் தொடும் இக்கதையின் மூலம் உபதேசிக்கப்படும் அன்னக்கோட்பாடு தமிழ் இலக்கியத்தில் பல இடங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. சங்க கால இலக்கியங்கள் தொடங்கி வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த தமிழ் நூல்கள் விருந்தோம்புதலையும் பசிப்பிணி அகற்றுவதையும் மனித வாழ்க்கையின் அடிப்படை நெறியாகக் குறிப்பிடுகின்றன. இப்பொருள் பற்றி ஒரு விரிவான ஆய்வினை மேற்கொண்டு தனியோர் புத்தகத்தை தொகுத்தளிப்பது இன்றியமையாததாகும் இங்கு நாம் அன்னப்பெருக்கம் மற்றும் பகிர்ந்திண்ணும் சனாதன பாரத தருமம் பண்டைய தமிழ் இலக்கியத்தில் எத்துணைத் தெளிவாகவும் சிறப்பாகவும் வருணிக்கப்பட்டுள்ளது என்பதைச் சில மேற்கோள்களின் மூலம் சுருக்கமாக எடுத்துக்காட்டுவோம்.

*புறநானூற்றில் உழவினைப் பாதுகாக்க வேண்டிய அரசனது கடமை*

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர் கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் பிணரி யோரீன்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய விகழாது வல்லே

நிலனெனி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே

குடபுலவியனார் என்னும் சான்றோர் பாண்டியன் நெடுஞ் செழியனிடம் இவ்வாறு கூறுகிறார்: “பெரியோய்! நீரை இன்றியமையாததாகக் கொண்டே இந்த உடம்பிற்கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிரையே கொடுத்தவர் ஆவார். இந்த உடம்பானது உணவையே ஆதாராமாகக் கொண்டு அவ்வுணவாலேயே தழைக்கிறது. நிலத்தோடு சேர்ந்த நீரினால் உணவு உண்டாகிறது. இத்தகைய நிலத்தையும் நீரையும் கூட்டியவர்கள், அதாவது, நீர் இல்லாத நிலத்தில் நீர்நிலை உருவாக்கியவர்கள், இவ்வுலகில் உடம்பையும் உயிரையும் படைத்தவராவர் ஆறு, ஏரி, குளம் முதலியவற்றால் நீர் வருவாயின்றி மழையையே எதிர்பார்த்து இருக்கும் புன்செய் நிலங்கள் அகன்ற பரப்பினை கொண்டிருந்தாலும், பகை நீக்கி செல்வத்தைப் பெருக்குவதான அரசனின் கடமைகளுக்கு உதவாது. ஆதளால், அரசே! நீ விரைந்து நிலகுழிந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு நீர்த்தேக்கத்திற்கான முயற்சிகளை மேற்கொள் வாயாக. இவ்வாறு செய்வதர்களின் பெயரும் புகழும் இவ்வுலகில் என்றும் விளங்கும்.”

கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமு முழுபடை
ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்
அதுநற் கறிந்தனை யாயி னீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்

குடிபுறந் தருவை யாயினின்
அடிபுறந் தருகுவ ராடங்கா தோரே

வெள்ளைக்குடிநாகனார் என்னும் சான்றோர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் இவ்வாறு கூறுகிறார்: "வேந்தே! உன்னுடைய வெண்கொற்றக்குடை குடிகளுக்கு அருள் செய்வதன் பொருட்டுக் கொண்டதேய்ன்றி, வெயிலை மறைப்பதற்காகக் கொண்டதன்று. கலப்பை கொண்டு உழுது விளைந்த நெல்லின் பயனேயாகும். மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாவிட்டாலும், விளைச்சல் குறைந்தாலும், இவற்றிற்கெல்லாம் அரசனே காரணம் என்று இவ்வுலகம் பழிக்கும். நீ இதனை அறிந்து, குறளை கூறுவராது உறுதியில்லாத வார்த்தையைக் கேளாது, ஏரைப் பாதுகாக்கும் உழவர்களின் குடியைப் பாதுகாப்பாயாக. அதன் மூலம் அனைத்துக் குடிகளையும் பாதுகாப் பாயெனில் உனது அடியை உன் பகைவர் போற்றுவர்."

## புறநானூற்றில் பசிப்பிணி மருத்துவன் பண்ணனின் சிறப்பு

யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி வயரந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இரங்கிளைச் சிறா அர்க் காண்டுங் கண்டும்
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே

சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன் என்பவன் தன் நண்பன் சிறுகுடிகிழான் பண்ணன் பசித்தோரின் பசி அகற்றும் சிறப்பை எடுத்துக் கூறும் பொருட்டு இவ்வாறு பசித்து வந்த பாணண் ஒருவன் பாடுவதாக இப்பாலைப் பாடியுள்ளான்: "மரம் பழுத்தவிடத்துப் பறவைகள் தத்தம் கூட்டத்தோடு சென்று கனிகளை உண்டு ஆரவாரிக்கும் ஒலியைப் போல் பண்ணன் மனையில் உணவு உண்டதால் உண்டாகிய ஆரவாரமும் கேட்கிறது. மழை வருவதைக் காட்டும் காற்றைக் கொண்டு அறிந்து தம்

முட்டைகளை மேடான இடத்தில் அளைகளில் கொண்டு சேர்க்கும் எறும்புகள் சாரை சாரையாய் ஒழுங்குடன் செல்வதைப் போல், இளஞ்சிறார்கள் சோறுடைக் கையராய் வேறு வேறாகப் போவதையும் காண்கிறோம். இவற்றை எல்லாம் கேட்டும் கண்டும் அமையாது வருந்தும் இந்த சுற்றத்தினரின் பசியைப் போக்கும் பசிப்பிணி மருவத்துவனாகிய பண்ணனது இல்லம் அருகில் உள்ளதா? அன்றி தொலைவில் உள்ளதா? கூறுங்கள்."

## புறநானூற்றில் தனித்துண்ணாமையின் சிறப்பு

உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமியருண்டலு மிலரே முனிவிலர்

பாண்டிய வேந்தன் இளம் பெருவழுதி என்பவன் பாடிய பாடல் இது: "தேவலோகத்து அமிர்தமே கிடைக்கப் பெற்றாலும், அதனை இனிது என்று தனித்து உண்ணாதிருத்தல், போன்ற அருங்குணங்களை உடைய உயர் பண்பாளர்களால் இவ்வுலகம் உள்ளது."

## புறநானூற்றில் வேலி ஆயிரம் விளைச்சல் பற்றிய குறிப்பு

இன்றுயில் பெருகதில் நீயே வளஞ்சால்
துளிபத னறிந்து பொழிய
வேலி யாயிரம் விளைகநின் வயலே

கல்லாடனார் என்னும் சான்றறோர் பொறையாற்றுக் கிழானை இவ்வாறு வாழ்த்துகிறார்: "நெல்வளம் நிறையும் காலமறிந்து மழை பொழிய உன்னுடைய வயல்கள் வேலி ஆயிரமாக விளைக-ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் விளையுமாக.

## பொருநர் ஆற்றுப்படையில் வேலி ஆயிரம் விளைச்சல் பற்றிய குறிப்பு

கூனி குயத்தின் வாய் நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறக்கி நாள்தொறும்
குன்று எனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந் தெற்று மூடையின் இடம் கெடக் கிடக்கும்

சாலி நெல்லின் சிறை கொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆக
காவிரி புரக்கும் நாடு கிழவோனே

இப்பாடல் முடத்தாமக்கண்ணியார் என்னும் சான்றோர் பாடியது. காவிரி ஆறு பாய்ந்து ஓடும் கரிகாலச் சோழனின் நாட்டு வயல்களில் மிக உயர்ந்த சாலி நெற்பயிர் வேலி ஆயிரமாக விளைந்தது; வேலிக்கு ஆயிரம் கலம் அளவிற்கு விளைந்த இந்நெற்பயிர் வளைந்த அரிவாள் கொண்டு அரியப்பட்டு வேறு வேறு கட்டுக்களாய் அடுக்கி வைக்கப்பட்டு குன்றுகளாய்க் குவிந்தன.

## பட்டினப்பாலை போற்றும் பூம்புகார் அறச்சாலைகளின் சிறப்பு

அறம் நிலைஇய அகன் அட்டில்
சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந்து ஒழுகி
ஏறு பொரச் சேறாகி
தேர் ஓடத் துகள் கெழுமி
நீறு ஆடிய களிறு போல
வேறுபட்ட வினை ஓவத்து
வெண் கோயில் மாசு ஊட்டும்

பூம்புகார் நகரின் மாடமாளிகைகள் கண்ணம் பூசப்பெற்று பல்வேறு வகைப்பட்ட வண்ண ஓவியங்களால் அழகு செய்யப்பெற்றுள்ளன. அந்நகரில் பல்வேறு வகைப்பட்ட அறச்சாலைகள் பெரிய பெரிய அடுக்களைகளைக் கொண்டுள்ளன. அவற்றில் எப்போதும் பெருந்தி ரளான சோறு வடிக்கப் பெறுகிறது. வடிக்கப்பெறும் கஞ்சி ஆறு போலத் தெருவெங்கும் பரந்து வருகிறது. அவற்றின் மீது எருதுகள் சண்டையிடுவதால் அது சேறாகிறது. அச்சேற்றின் மீது ஓயாது செல்லும் தேர்களால் புழுதி கிளம்ப அங்கு விளங்கிய வெண்கோயில்களை அவை மாசுப்படுத்துகின்றன.

## திருக்குறளில் இல்லறத்தின் சிறப்பு

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை

இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப்படுபவன் அறவியல் பினை உடைய பிரமசாரி, வானப்பிரஸ்தன். சந்நியாசி என்கிற மூவர்க்கும் அவர்கள் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற ஆதரவாய் விளங்குகிறான்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தான்என்றாங் கைம்புலத்தா றோம்பல் தலை.

பித்ருக்கள், தேவர்கள், விருந்தினர், சுற்றத்தார் இவர்களிடத்தும் மற்றும் தன்னிடத்தேயும் செய்ய வேண்டிய அறநெறிகளை, முக்கியமாக, உணவு அர்ப்பணித்து கடன் ஆற்றுதலை வழுவாமல் செய்தலே இவ்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாகும்.

## திருக்குறளில் விருதோம்பலின் சிறப்பு

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

இல்லற வாழ்க்கைய மேற்கொண்டு பொருள்களைப் போற்றி வாழும் செய்கை எல்லாம், விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உபகாரம் செய்வதன் பொருட்டேயாம்.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

தன்னை நாடி வந்த ஒருவர் தன் வீட்டின் வெளிப்புறத்தில் பசியோடி ருக்க, தான் மட்டும் உண்ணுவது, அது அமிர்தமே ஆயினும், முறைமை அன்று.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று

தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் உபசரித்து போற்று பவனுடைய இல்வாழ்க்கை ஒருகாலும் வறுமையினால் கேடுபடாது.

அகனமர்ந்து செய்யான் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்

முகத்தில் இனிமையுடன் தகுந்த முறையில் விருந்தினரைப் பேணுபவ னுடைய இல்லத்தில் மனம் மகிழ்ந்து தங்கி இருப்பான்.

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

விருந்தினர் உண்ட பின் மிகுந்ததைத் தான் உண்ணும் இயல்பு உடையவனுடைய நிலத்தில் விதை இடுதல் வேண்டுமோ? அவன் நிலத்தில் பயிர்கள் தானே விளையும்.

செல்விருந் தோம்பி வருவிருந்து பாத்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

தன்னிடம் வந்து செல்லும் விருந்தினர்களைப் பேணி வழி கூட்டி அனுப்பிய பின், இனி வரக் கூடிய விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இயல்புடையவன் வானுலகத்தில் தேவர்கள் போற்றும் சிறந்த விருந்தினன் ஆவான்.

## திருக்குறளில் பகுத்தளித்தலின் சிறப்பு

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்

தவ வலிமை மிகுந்தோர்க்குத் தம்மை வருத்தும் பசியைப் பொறுத்தலே வலிமை தருவதாம். ஆனால் இத்தவ வலிமையானது பிறருடைய பசியைத் தமது ஈகையால் ஒழிக்கக் கூடியவர்களது வலிமைக்குப் பின் தங்கியதே.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

வறியவர்களது பசியைத் தீர்த்தல் என்பது பொருள் பெற்றவர்கள் அப்பொருளைப் பிற்காலத்தில் தனக்கு உதவுமென சேமித்து வைக்கும் இடமாம்.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது

எப்பொழுதும் பகுத்துண்ணும் கோட்பாட்டைப் பின்பற்று பவனைப் பசிப்பிணி என்னும் தீய நோய் ஒருகாலும் அணுகாது.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை

வைத்திழக்கம் வன்க ணவர்

தம்மிடம் உள்ளதை ஈயாது வைத்துப் பின் அதனை இழந்துவிடும் குரூர மனம் கொண்டவர்கள் பிறருக்குக் கொடுத்து உதவுவதால் எய்தும் இன்பத்தினை அறியார் போலும்.

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்

தேடிய உணவினை மற்றவர்க்கு ஈயாது தானே தனித்து உண்ணுதல் ஒருவர்க்குப் பிறரிடம் சென்று இரத்தலை விடக் கீழானதாகும்.

சாதலின் இன்னாத தில்லை இனிததுஉம்
ஈதல் இயையாக் கடை

ஒருவருக்கு சாதலைப் போல் துன்பமானது வேறொன்றும் இல்லை. ஆனால் யாசித்தவருக்கு ஒன்றைத் தம்மால் கொடுக்க முடியாத போது அத்தகைய சாதலும் இன்பமாக விரும்பத்தக்கதாம்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

பல உயிர்களுக்கும் பகுத்தளித்து, பின்னர் தானும் உண்டு அவ்வுயிர்களை ஓம்புதல் அறுநூலோர் தொகுத்துக் கூறியுள்ள அறங்கள் எல்லாவற்றினும் தலையாய அறமாகும்.

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்

செல்வத்தைப் பெற்றவன் அதனால் அடையும் பயனாவது, தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகையில் அச்செல்வத்தைக் கொண்டு வாழ்தலேயாம்.

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞானம்
மரப்பாவை சென்றுவந் தற்று

யாசிப்பவர்களே இல்லையாயின், இந்தப் பெரிய உலகத்தில் உள்ள மக்கள் உயிரற்ற மரப்பாவை இயந்திரக் கயிற்றால் இயங்கிக் கொண்டிருப்பதைப் போன்று உணர்ச்சியற்று இருப்பார்.

## திருக்குறளில் வளமான நாடு

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

குன்றாத விளைச்சலைச் செய்யும் உழவர்களும், அறவோரும், கேடில்லாத செல்வம் உடையோரும் கூடி வாழ்வதே நாடாகும்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு

மிகுதியான பசியும், நீங்காத நோயும், பிறநாடுகளிலிருந்து வந்து அழிவு செய்யும் பகையும், இல்லாமல் இனிது நடப்பதே நாடாகும்.

## திருக்குறளில் உழவின் சிறப்பு

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

பிற தொழில்களைச் செய்து திரிந்தாலும், முடிவில் உணவிற்கு ஏர் உடைய உழவர்களையே சார்ந்து நிற்க வேண்டும். ஆதலால், எல்லா வருத்தமுற்றாலும் உழும் தொழிலே தலைசிறந்தாகும்.

உழுவார் உலகத்தார்க் காணி அஃதாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து

உழவுத் தொழிலைச் செய்யாமல் பிற தொழில்களைச் செய்யும் அனைவரையும் உழவர் தாங்குதலால் இந்த உலகத்தாராகிய தேருக்கு உழவர் அச்சாணியாவர்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

எல்லோரும் உண்ணும்படி உழவினை மேற்கொண்டு அதனால் தாமும் உண்டு வாழ்கின்ற உழவர்கள் உரிமையாடு தமக்குத் தாம் உரியராய் வாழ்கின்றவர். மற்ற அனைவரும் பிறரைத் தொழுது அதனால் தாம் உண்டு அவர் பின் செல்வார். அவர்கள் தமக்குத் தாம் உரியவர் அல்லர்.

பலகுடை நீழலும் தங்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்

உழுதல் தொழிலால் நெற்கதிர்களின் நிழலையே தம்முடையதாகக் கொண்டு வாழும் உழவர்கள், பல அரசர்களின் ஆளுகைக்கு உட்பட்ட நிலம் அனைத்தையும் தம் அரசனின் குடைக்குக் கீழ் காண்பர். தம் உழவினாலேயே தம் அரசனுடைய கொற்றம் பெருக்கி மண் முழுதும் அவனுடையதாக்க வல்லவர்கள் உழவர்கள்.

உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை

உழும் தொழிலை மேற்கொண்டுள்ளவர்களின் கை அதனைச் செய்யாது மடங்கி இருக்குமாயின், 'நாம் அனைத்தையும் துறந்து விட்டோம்' என்று கூறும் துறவிகளும் நிலையற்றவராகிவிடுவர்.

## நாலாடியாரில் ஈத்துண்ணுதலின் சிறப்பு

நட்டார்க்கும் நள்ளாதவர்க்கும் உள வரையால்
அட்டது பாத்து உண்டல் அட்டு உண்டல் அட்டது
அடைத்து இருந்து உண்டு ஒழுகும் ஆவது இல்மாக்கட்கு
அடைத்தவாம் ஆண்டைக் கதவு

தனது திறமைக்கு ஏற்றவாறு, சமைத்த உணவினை நண்பர்களுக்கும் நண்பர் அல்லாதவர்க்கும் பகுத்தளித்துப் பின் தான் உண்பதே உண்ணும் முறையாகும். அவ்வாறன்றி, சமைத்த உணவைக் கதவை அடைத்து விட்டு உள்ளிருந்து உண்பவர்க்கு மறுமை உலகின் கதவுகள் அடைக்கப்படும்.

## சிலப்பதிகாரத்தில் உழவின் சிறப்பு

பரப்பு நீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்

யாசிப்பவர்களது கூட்டத்தையும், அனைவரையும் பேணிப் போற்றும் தன்மை உடையவராய் விளங்குவதால் மன்னர்களின் கொற்றத்தையும் தம் உழவினடத்தே விளைப்பர் வேளாளர்கள்.

### சிலப்பதிகாரத்தில் மன்னர் குடித் துன்பம்

மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்

மழையானது அளவில் குறைந்தோ காலம் தவறியோ பெய்தாலும் அதற்குக் காரணம் அரசனே என்று உலகம் பழிப்பதால், அரசன் அஞ்ச வேண்டியுள்ளது. உயிர்கள் ஏதேனும் காரணத்தால் வருந்தினால், அதற்கும் அரசன் அஞ்ச வேண்டியுள்ளது. குடிகளுக்குத் தீமை நேர்ந்தாலும் அரசன் அஞ்ச வேண்டியுள்ளது. மக்களைக் காக்கும் அரச குலத்தில் பிறப்பது துன்பமே. மகிழ்ச்சி கொள்ளக் கூடியது அல்ல.

### மணிமேகலையில் பசிப்பிணி தீர்த்தலின் சிறப்பு

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது

பசிப்பிணி என்னும் கொடிய பாவியானது மக்களைப் பீடிக்குமே யானால், நல்ல குடியில் பிறந்தார்க்கு இயல்பாகவே உள்ள உயரிய பண்புகளை அழித்து விடும். அவர்கள் அடைந்த சிறப்புகளை இல்லை என்றாக்கிவிடும். நாணம் என்னும் அணிகலைனைக் களைந்து விடும். மாட்சிமையுடைய அழகையும் அழித்து விடும். தம்முடைய குடும்பத்தாரோடு தெருவில் நிறுத்தி விடும். இத்தகைய கொடிய பாவியிடமிருந்து காத்து மற்றவர்களின் பசியைப் போக்கும் உத்மர்களின் புகழைச் சொல்வதற்கு எனது நாவிற்குத் துணிவு வரவில்லை. அத்தகு சிறந்த புகழ் உடையவர் பசிப்பிணி அகற்றியோர்.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே

இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தவராவர்.

அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்
மறவா திதுகேண் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியு முடையு முறையுளு மல்லது
ணண்ட தில்லெனக் காவல னுரைக்கும்

உத்மமான அறம் என்பது யாதெனில், இவ்வுலகத்து மக்களுக்கு உணவும், உடையும், இருப்பிடமும் அளிப்பதே. இதை விடச் சிறந்த அறம் வேறொன்றும் இல்லை.

## சம்பந்தர் போற்றும் திருமுல்லைவாயிலின் சிறப்பு

மஞ்சாரு மாட மனைதோறும் ஐயம்
உளதென்று வைகி வரினுஞ்
செஞசாலி நெல்லின் வளர்சோ றளிக்கொள்
திருமுல்லை வாயி லிதுவே

மேகங்கள் தவழும் மாடமனைகள் தோறும் உணவு கிடைக்கும் என்ற உறுதியுடன் காலம் கழித்து வருவோருக்கும் மிக உயர்ந்த செஞ்சாலி நெல்லின் அரிசியால் ஆக்கப் பெற்ற சோறு பெறுமளவில் கிடைக்கப் பெறும் சிறப்பு வாய்ந்த திருமுல்லைவாயில் இதுவே.

## சம்பந்தர் போற்றும் கழுமலத்தாரின் வண்மை

விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலந் தானுங்
கலங்கலிலா மனம்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே

கழுமலம் என்னும் திருப்பிரமபுரம் மறையோர்களும் வள்ளண்மை மிக்க பெருமக்களும் நிரம்பி விளங்கிய திருத்தலமாகும். இக்கழு மலத்தார் மீன் சனியால் வானம் பொழியாது, வறட்சியும் பற்றாக் குறையும் நிலவிய காலங்களிலும் தம் மனம் கலங்காது பெரு வண்மையுடன் பகிர்ந்துண்டு வாழ்ந்த பெருமை உடையவர்.

### சம்பந்தர் போற்றும் திருமறைக்காட்டினரின் வள்ளண்மை

இரவலர் துயர்கெடு வகைநினை யிமையவர்
புரமெழில் பெறவளர்
மரநிகர் கொடைமனி தர்கள்பயில் மறைவனம்
அமர்தரு பரமனே

யாசிப்பவர்களின் துயரம் தீரும் வகையில் விரும்பிய வற்றையெல் லாம் அளிக்கவல்ல கற்பக மரத்தைப் போல் கொடைத்தன்மை உடைய மனிதர்கள் மிகுந்தது திருமறைக்காடு. இப்பெருமைமிகு திருமறைக்காட்டில் சிவபெருமான் வீற்றுள்ளான்.

### சம்பந்தர் போற்றும் திருமயிலையின் சிறப்பு

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

புன்னை மரங்கள் நிறைந்த அழகிய சோலைகளால் சூழப்பெற்ற மயிலையில் விரும்பி அமர்ந்துள்ளான் கபாலீச்சுவரன். இறைவனுடன் இரண்டறக்கலந்த பண்பின் உருவாய் விளங்கும் அக்கோயிலைச் சேர்ந்த மற்றும் வெளியிலிருந்து வரும் சிவனடியார்களுக்கு மிகச்சிறப்பான முறையில் அமுது படைக்கப்படுகிறது. இத்தகைய அன்னதானத்தின் சிறப்பினைக் காணாது நீ போவாயோ பூம்பாவாய்?

### அப்பர் போற்றும் அன்னம் பாலிக்கும் திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னன் பாலிக்கு மோஇப் பிறவியே

எல்லாவற்றிற்கும் மூலாதாரமாய் விளங்கும் அன்னத்தையே தம் பாட்டின் முதல் சொல்லாகக் கொண்டுள்ளார் திருநாவுக்கரசு சுவாமிகள். தில்லைச் சிற்றம்பலம் அளவிலாத அன்னதானம் செய்யும் சிறப்புமிகு தலமாகும். இம்மை இன்பத்திற்கும் மறுமை இன்பத்திற்கும் வழி வக்கும் இத்திருலத்தின் மகிமையைப் பாடும் அப்பர் ‘அன்னம் பாலிக்கும்

தில்லைச் சிற்றம்பலம்' என்ற அடியுடனேயே தொடங்கி அன்னத்தையும், அவ்வன்னத்தை அளிக்கும் தில்லையையும் பெருமைபடுத்துகிறார்

### அப்பர் விளக்கும் ஈபவரின் பெருமை

இலங்காலஞ் செல்லாநா ளென்று நெஞ்சத்
திடையாதே யாவர்க்கும் பிச்சை யிட்டு
விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு
மெய்யன்பு புகப்பெய்து பொய்யை நீக்கித்
துலங்காமெய் வானவரைக் காத்துநஞ்சம்
உண்டபிரா னடியிணைக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

தாம் பொருள் இல்லாது வறுமை அடைந்த போதிலும், மனம் கலங் காது அனைவருக்கும் தம்மால் இயன்ற உணவு படைத்து சிறந்து விளங்கும் பண்புடையாளர்களின் உள்ளத்தையே தம் இரும்பிடமாய்க் கொண்டு விளங்குகிறார் கன்றாப்பூர் ஈசன்.

### சுந்தரர் போற்றும் திருக்கேதாரத்தின் சிறப்பு

பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளும் நாளால்அறம் உளவே
அறிவானிலும் அறிவானல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் நடுவார்தொழு கேதாரமே னீரே

உட்ம்பை வீணே சுமந்து திரிகின்றீர். இவ்வுடம்பு பின்னொரு நாள் நரிகளுக்கு இரையாகப் போவதை நீங்கள் அறியீர். யமன் இவ்வுயிரைப் பறிக்க நினைக்கும் நாளில் உம்மைக் காத்துக் கொள்ள அறச்செயல்கள் ஆற்றியுள்ளீரா? அறிவுடையார்களிலும் சிறந்த அறிவுடையவர்களாய் வருவார்க்கெல்லாம் நல்ல நறுமணத்தையுடைய நீருடன், சோறும் இன்சொல்லும் அளித்து சிவனைப் போற்றும் அடியார்களைக் கொண்ட 'திருக்கேதாரம்' என்பீரே.

## பெரிய புராணம் போற்றும் திருநாட்டுக் குடிகள் சிறப்பு

அரசுகொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண்டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையும் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி

காவிரி பாயும் சோழநாட்டில் வயல்களில் நெல் மலைகள் குவிந்து கிடைக்கின்றன. அந்த நெற்குவியல்களிலிருந்து அரசுக்குச் செலுத்த வேண்டிய கடமையைச் செலுத்திய பின்பு மிகுந்த விளைச்சலிலிருந்து அறங்கள் ஆற்றப்படுகுகின்றன. தெய்வ த்திற்கும், குரவருக்கும், விருந்தினருக்கும், சுற்றத்தாருக்கும், இன்னும் அனைத்து அதிதிகளுக்கும் உணவிடப்பட்டு வேண்டியன அளிக்கப்படுகின்றன. தம்மைச் சார்ந்தோர் அனைவரையும் ஆதரித்துப் பேணிப் போற்றும் பெருமைமிகு குடிகள் உடையது காவிரி பாயும் சோழ வளநாடு.

## பெரிய பிராணத்தில் தொண்டை நாட்டினர் சிறப்பு

நீடு தண்பணை உடுத்தநீள் மருங்கின; நெல்லின்
கூடு துன்றிய இருக்கைய விருந்தெதிர் கொள்ளும்
பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கும்

தொண்டைநாட்டின் வளமை மிகுந்த ஊர்கள் குளிர்ந்த பெரிய வயல்களால் சூழப்பெற்றுள்ளன. எங்கும் நெற்குவியல்கள் நெருக்கமாகக் காணப் படுகின்றன. பெரிய தெருக்களில் மனைகள் தோறும் தருமநெறியுடன் இல்லறத்தில் ஈடுபட்டிருந்த பெருமைமிகு குடிகள் அதிதிகளை எதிர்நோக்கி வேண்டியன அளிக்கக் காத்திருந்தனர்.

## பெரிய புராணம் போற்றும் திருவொற்றியூர் பெருமை

பன்முறைதூ ரியமுழங்கு விழவோவா பயில்வீதி
செந்நெல்அடி சிற்பிறங்கல் உணவோவா
திருமடங்கள்

திருவொற்றியூர் என்னும் திருத்தலத்தின் வீதிகளில் நாளும் அன்னதானப் பெருவிழா சிறப்புற நடைபெறுகிறது. அங்குள்ள திருமடங்களில் செந்நெல் அரிசியால் சமைக்கப்பட்ட உணவு வகைகள் மலைகளாய்க் குவிக்கப்பட்டு விளங்குகின்றன.

### பெரியாழ்வார் போற்றும் திருவரங்கத்தின் சிறப்பு

மறைப் பெருந் தீ வளர்த்திருப்பார்
வருவிருந்தை அளித்திருப்பார்
சிறப்பு உடைய மறையவர் வாழ்
திருவரங்கம் என்பதுவே

வேதங்களில் கூறப்படும் முத்தீ வளர்த்துத் தம் இல்லத்திற்கு வரும் அதிதிகளைப் பேணிப் போற்றும் சிறப்புடை சான்றோரால் நிரம்பி விளங்குவது திருவரங்கம்.

### குலசேகரர் போற்றும் விண்ணகரத்துச் சிறப்பு

அரு மறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும்
அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும்
தெருவில் மலி வளரும் சிறக்கும் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மின் நீரே

நான்கு வேதங்களும், இல்லறத்தார் நடத்தும் ஐவகை வேள்விகளும், ஆறு அங்கங்களும், ஏழிசையும் சிறந்து விளங்க விழாக்கள் நாளும் நடைபெறும் பெருமைமிகு திருத்தலம் திருக்காழிச் சீராம விண்ணகரம் ஆகும்.

### கம்பராமாயணத்தில் கோசல நாட்டின் சிறப்பு

எறிதரும் அரியின் சும்மை எடுத்து வான் இட்ட போர்கள்
குறிகளும் போத்தின் கொல்வார் கொன்ற நெல் குவைகள் செய்வார்
வறியவர்க்கு உதவி மிக்க விருந்து உண மனையின் உய்ப்பார்
நெறிகளும் புதைய பண்டி நிறைந்து மண் நெளிய ஊர்வார்

கோசல நாட்டில் எங்கெங்கும் வளம் கொழித்தது. உழவர்கள் அரிந்த நெற்கதிரின் குவியல்கள் வானத் தொட்டன. எருமைக் கடர்க்கள் அவற்றைத் தம் கால்களால் மிதித்து இடித்தன. இவ்வாறு உதிர்ந்த நெல்லால் குவியல்கள் ஆக்கப்பட்டன. இதிலிருந்து வறியவர்களுக்கும் நெல் அளிக்கப்பட்டது. மிகுந்த நெல் விருந்தினருக்கு உணவு அளிப்பதிற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வாறு

நெல்லைச் சுமந்து செல்லும் வண்டிகளில் பாரம் மிகுந்ததால் நிலங்களில் வண்டிச் சக்கரங்களின் சுவடுகள் ஆழப் பதிந்தன.

முந்து முக் கனியின் நானா முதிரையின் முழுத்த நெய்யின்
செந் தயிர்க் கண்டம் கண்டம் இடை இடை செறிந்த சோற்றின் தம்
தம் இல் இருந்து தாமும் விருந்தொடும் தமரினோடும் அந்தணர் அமுத
உண்டி அயிலுறும் அமலைத்து எங்கும்

நாடு முழுவதும் மக்கள் அனைவரும் தம் மனைகளில், விருந்தினருடனும் சுற்றத்தினருடனும் சேர்ந்து முக்கனிகளான மா, பலா வாழைப் பழங்களையும், துவரை முதலிய பருப்பு வகைகளையும், நெய்யும், சோற்றுடன் தயிரும், வெல்லக் கட்டியும் உண்டு மகிழ்ந்து நிறைவுடன் விளங்கினர்.

பெருந் தடங் கண் பிறைநுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே?

அந்நாட்டின் பெண்கள் மிகுந்த செல்வத்தையும், கல்வியையும் ஒருங்கே பெற்றிருந்தபடியால் வருந்தி வந்தவர்கள் அனைவருக்கும் உணவும், இருப்பிடமும் மற்றும் அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் அளிப்பதையே தம் முழுநேர வேலையாய்க் கொண்டிருந்தனர்.

பிறை முகத் தலை பெட்பின் இரும்பு போழ்
குறை நறைக் கறிக் குப்பை பருப்பொடு
நிறை வெண் முத்தின் நிறத்து அரிசிக் குவை
உறைவ கொட்பின் ஊட்டிடம் தோறெலாம்

எக்காலத்தும் அனைவருக்கும் உணவு வழங்கிய ஆரவாரத்தையுடைய அன்ன சத்திரங்களில், பிறைச் சந்திரனை ஒத்த வளைந்த கத்திகளால் நறுக்கப்பட்ட காய்கறிக் குவியல்களும், பருப்புக் குவியல்களும், முத்தைப் போன்ற வெண்மையான அரிசிக் குவியல்களும் காட்சியளித்தன.

நெல் மலை அல்லன நிரை வரு தரளம்
சொல் மலை அல்லன தொடு கடல் அமிர்தம்
நல் மலை அல்லன நதி தரு நிதியம்
பொன் மலை அல்லன மணி படு புளினம்

அங்கு மலைகளாகக் காட்சி அளித்தவை நெற்குவியல்கள் இல்லை யெனில் அவை முத்துக் குவியல்களாக இருக்கக் கூடும். அவை முத்துக் குவியல்களும் இல்லை என்றால். கடலிலிருந்து கிடைக்கப்பெற்ற அமிர்தமான உப்புக் குவியல்களாக இருக்கக் கூடும். அன்றி உப்புக் குவியல்களாகவும் இல்லாவிட்டால் அவை பொற்குவியல்களாகவோ அல்லது நதிகள் தம் கரைகளில் சேர்ந்த செல்வமாகவோ இருக்கக் கூடும். அல்லது அவை பல அரிய மணிகளைத் தம்முள் கொண்ட மணற் குவியல்களாக இருக்கக் கூடும்.

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரை இலாமையால்
வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்

அங்கு வறுமை இல்லாததால் ஈகையும் தானமும் காணப் பெறவில்லை. பகைவர்கள் இல்லாததால் அங்கு வீரத்தை வெளிக்காட்டுவோர் ஒருவரும் இருக்கவில்லை. அங்கு பொய்மை இல்லாததால் உண்மை யைத் தனிப்பட்டு சிறப்பித்தல் என்பது இல்லை. அனைவரும் அறிஞர்களாய்த் திகழ்ந்ததால் அங்கு ஒருவருக்கும் ஒன்றும் விளக்கி எடுத்துரைக்கப்படவில்லை.

பொற்பின் நின்றன பொலிவு பொய் இலா
நிற்பின் நின்றன நீதி மாதரார்
அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே

அங்கு மக்கள் பொலிவுடன் திகழ்ந்தனர். மக்களின் நற்பண்புகளும் அவர்களுடைய புற அழகிற்கு ஏற்றவாறு அமைந்திருந்தன. கோசல நாட்டு மக்கள் பொய்யும் வஞ்சனையும் இன்றி விளங்கியதால், நீதி நிலைப்பெற்று இருந்தது. பெண்களின் சிறந்த தன்மையால் அறம் நிலைத்தது. அப்பெண்டிரின் கற்பு நெறியால் காலம் தவறாமல் வேண்டிய அளவு மழை பெய்தது.

### *பாரதம் சமீப காலம் வரை அன்னக்கோட்பாட்டைப் பின்பற்றியது*

பாரதம் வெகு சமீப காலம் வரை இக்கோட்பாட்டைப் பின்பற்றி வந்துள்ளது. பாரதத்தின் வெவ்வேறு பகுதிகளச் சேர்ந்த அனைத்து நூல்களும்

மிகுதியான அன்னம் இருப்பதை உறுதி செய்வது மற்றும் தான் உண்பதற்கு முன் உதாரமாய்ப் பகிர்ந்தளிப்பது என்ற இக்கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய வண்ணம் உள்ளன. பாரதத்தில் போற்றப்படும் மாமன்னர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களும், பாரதம் எங்கும் திகழ்ந்த பற்பல தான புண்ணிய பொது நல அமைப்புகளும், தான சாஸனங்களும், கல்வெட்டுகளும் உணவைப் பெருக்குவது, அதை உதாரமாய் பகுத்தளிப்பது என்ற இந்த நியமத்தை பாரத மக்கள் எத்துணைத் தீவிரத்துடன் கடைப்பிடித்து வந்துள்ளனர் என்பதற்கான கண்கூடானச் சான்றுகளாகும்.

ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாமன்னர் ஹர்ஷவர்த்தனரின் வாழ்க்கைச் சரித்திரம் பகுத்தளிக்கும் கோட்பாட்டை பேணிப்போற்றிய பாரதப் பரம்பரைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. இப்பேரரசர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைத் தம் கருவூலத்திலிருக்கும் செல்வம் அனைத்தையும் தம் மக்களிடையே பகிர்ந்தளித்து விநியோகித்தார். பேரரசர் ஹர்ஷவர்த்தனரின் ஆட்சிக் காலத்தில் பாரதத்திற்கு தீர்த்த யாத்திரையின் பொருட்டு வருகை தந்த சீனப் பண்டிதரான யுவான் சுவாங் ஹர்ஷவர்த்தனர் பகிர்ந்தளிப்பதற் கென்றே நடத்திய மாபெரும் விழாக்களை வருணித் துள்ளது ஸ்ரீராமர் மற்றும் யுதிஷ்டிரைப் போன்ற புராதன பாரதீய அரசர்கள் மேற்கொண்ட மாபெரும் யக்ஞங்களில் இடையறாது நடை பெற்ற உதாரமான தானத்தையும் பகிர்ந்ளித்தலையும் பற்றிய வருணனைகளைப் போன்றே உள்ளது.

பாரதத்தின் சரித்திரத்தில் போற்றப்படும் மன்னர்களும் பாரத மக்களும் சமீப காலம் வரையில் கூட பகுத்துண்ணும் கோட்பாட்டை மிகச் சிரத்தையுடன் பேணிப் போற்றி வந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய பிரிட்டிஷ் ஆட்சியின் அதிகாரிகளது குறிப்பேடுகளில் பரதகண்டத்தில் எங்கெங்கும் பரவியிருந்த தான புண்ணிய காரியங்கள் ஆற்றும் அமைப்புகளைப் பற்றிய வருணனைகள் மீண்டும் மீண்டும் காணப்படுகின்றன. வடக்கில் கேதாரநாத்திலிருந்து, மேற்கில் துவாரகை வரையிலும், கிழக்கில் பூரி வரையிலும், தெற்கில் தஞ்சாவூர், இராமேஸ்வரம் வரையிலும் தழைத்து விளங்கிய பல்வேறு அமைப்புகள் விருந்தோம்புதலையும் பகுத்துண்ணு தலையும் எங்ஙனம் கடைப்பிடித்தன என்பதைப் பற்றி நாம் இக்காலத்திய ஆவணங்களின் மூலம் அறிய முடியாது.

இவ்வாறு கிடைக்கும் ஒரு முக்கிய ஆவணம் ஹிமாலயத்தில்

உள்ள கேதாரநாதர் கோயிலில் அன்னதான திருப்பணியைச் செய்யும் பொருட்டும் கோயிலின் நித்திய வழிபாட்டிற்கான செலவுகளின் பொருட்டும் அக்காலத்திய நேபாள அரசர்கள் உதாரமாய் அளித்த தானங்களைப் பற்றியதாகும். கி.பி. 1797-ல் நேபாள அரசர் மகாராஜா ராம் பஹதூர் ஸா அவர்கள் தம் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மகசூரி, அதாவது இன்றைக்கு முஸௌரி என்று கூறப்படும் பர்காணாவின் முழு வருவாயையும் கேதாரநாதர் கோயிலில் சதாவிரதமான அன்னதானத்தை மேற்கொள்வதன் பொருட்டு அர்ப்பணித்திருந்தார். இதற்கான தன சாசனத்தில் நேபாள மன்னர் ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்திலிருந்து கார்த்திகை மாதம் வரையிலான ஏழு மாதங்களில் வருகை தரும் கிட்டத்தட்ட 25,000 யாத்திரிகர்களுக்கு ஆள் ஒருவருக்கு தினமும் 12 சிட்டாக்குகள் அரிசிஇ 2 சிட்டாக்குகள் பருப்பு, 2 தோலாக்கள் உப்பு மற்றும் 2 தோலாக்கள் நெய் என்ற அளவில் உணவு வழங்கப்பட வேண்டும் என்று கட்டளையிடுகிறார். இதற்கான செலவுகளை பர்காணாவின் மொத்த வருவாயிலிருந்து ஏற்ற பிறகு ஏதேனும் தொகை எஞ்சியிருப்பின் அதனை ஒவ்வொரு ஆண்டும் சேமித்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் கும்பமேளாவில் விநியோகிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். அரசர்களின் கோஷத்திலோ அல்லது பொது நிறுவனங்களின் சேமநிதியிலோ குவியும் செல்வத்தை அவ்வப்போது மீண்டும் மக்களுக்கே முழுமையாகப் பகிர்ந்தளிக்கும் பண்டைய பாரதீய அரசியல் கொள்கையை, ஹர்ஷவர்த்தனர் காலத்தோடு மட்டுமல்லாமல் வெகு சமீப காலம் வரையில் கூட பாரதீய அரசர்கள் பேணிப் போற்றியதை நேபாள அரசரின் இந்தத் தானசாசனம் சுட்டிக் காட்டுகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டு பாரதத்தில் பகிர்ந்தளித்து விருந்தோம்பும் சமூக அமைப்புகள் எங்ஙனம் செயற்பட்டன. என்பதைப்பற்றிய மற்றொரு விவரமான குறிப்பு தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர் ராஜ்யம் 1799-ல் பிரிட்டானியர் ஆட்சியின் எல்லைக்கு உட்பட்ட உடனேயே பிரிட்டிஷ் அதிகாரிகள் பல்வேறு பொதுப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த பூமி மற்றும் மேல்வாரத்தைப் பற்றிய ஆய்வு நடத்தி அவற்றைப் பறிமுதல் செய்யும் முயற்சியைத் தொடங்குகின்றனர். இந்த ஆய்வின் போது பிரிட்டிஷ் அதிகாரிகள் விசாரணைக்குப் பதிலளிக்கையில் அப்போதைய தஞ்சாவூர் மாமன்னர் ராஜா ஸர்போஜி மஹாராஜா தஞ்சாவூர் மீது திணிக்கப்பட்டிருந்த பிரிட்டானிய 'ரெஸிடெண்ட்'டிற்கு ஒரு கடிதம் எழுதுகிறார். 1801 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இக்கடிதத்தில் ராஜா ஸர்போஜி தம் ராஜ்யத்தில்

பரவலாய் விளங்கிய சத்திரங்களைப் பற்றி வருணிக்கிறார். அதிலும், மிக முக்கியமான புண்ணிய க்ஷேத்திரமான இராமேஸ்வரத்திற்குச் செல்லும் சாலையில் தம் முன்னோர் காலத்திலிருந்தே பணியாற்றி வந்த சத்திரங்களைப் பற்றிச் சிறப்பாக குறிப்பிடுகிறார்.

இச்சத்திரங்களில், நாள் முழுவதும், வருகை தருவோர் அனைவரும் உணவு பெற்றனர். தவிர, நள்ளிரவு ஆனதும் மணி அடிக்கப்பட்டு உண்ணாதரவர் யார் இருப்பினும் அவர்கள் வருகை தந்து உணவை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு அழைக்கப்பட்டனர். மேலும் இச்சத்திரத்தில் தங்கியிருக்கும் சமயத்தில் நோயுற்றோர் எங்ஙனம் முறையாகப் பேணப்பட்டனர் என்பதையும் சத்திரத்திலேயே இறந்தவர்களின் வாரிசுகள் எவ்வாறு ஆதரிக்கப்பட்டனர் என்பதையும் மன்னர் தம் கடிதத்தில் விவரிக்கிறார். இந்தத் தான புண்ணிய பணிகள் ஆற்றும் சத்திரங்களாலேயே தஞ்சாவூர் தரும ராஜ்யம் என்று புகழப் பெற்றுள்ளது என்றும், தான் இந்தப் பெருமையையே தன் அந்தஸ்திற்கு அளிக்கப்பட்ட மிக உயர்ந்த சன்மானமாகக் கருதுவதாகவும் கூறுகிறார். பசித்து வந்தவருக்கு உணவு வழங்கும் இம்மரபு எவ்விதமாகவும் சுருக்கப்படுதலோ அல்லது நீக்கப்படுதலோ கூடாதென்றும், இதை பிரிட்டானிய ஆட்சியாளர்கள் உறுதி செய்ய வேண்டுமென்றும் ராஜா ஸர்போஜி தம் கடிதத்தில் கோருகிறார்.

பசித்தோர்க்கு உணவிடும் இந்த மரபிற்கு மட்டுமன்றி, மிகுதியான அளவில் உணவை உற்பத்தி செய்யும் பாரதீய மரபிற்கும் இறுதிப் பிரதிநிதிகளாய் விளங்கியவருள் தஞ்சாவூர் அரசரும் ஒருவர் ஆவார். பண்டைய காலத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலான காலப்பகுதியைச் சேர்ந்த வரலாற்றுச் சான்றுகள் அனைத்தும் பாரதம் முழுவதிலும் நிலங்கள் எவ்வாறு அமோகமான அன்னப் பெருக்கத்தை உண்டாக்கின என்பதைப் பறைசாற்றுகின்றன. கி.பி.900-லிருந்து 1200-க்கு உட்பட்ட தஞ்சாவூர் பகுதியின் சாசனங்கள் அப்பகுதியின் நிலங்களில் ஹெக்டேருக்கு 15 முதல் 18 டன்கள் வரையிலான நெல் உற்பத்தியானதைச் சுட்டிக்காட்டுகின்றன. கி.பி. 1100-ஐச் சேர்ந்த சாசனம் ஒன்று தென்னாற்காடுப் பகுதியில் ஹெக்டேருக்கு 14.5 டன் அளவிலான உற்பத்தியையும், மற்றும் கி.பி. 1325-ம் ஆண்டின் சாசனம் ஒன்று சற்று வறண்ட இராமநாதபுரம் பகுதியில் கூட ஹெக்டேருக்கு 20 டன் அளவிலான உற்பத்தியையும் பற்றிக் கூறுகின்றன.

*பாரதம் சமீப காலம் வரை அன்னக்கோட்பாட்டைப் பின்பற்றியது*

*பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கக் காலத்தின் குறிப்புகளும் பாரதத்தின் பல்வேறு பகுதிகள் உயர்ந்த உற்பத்தித்திறனைக் கொண்டு விளங்கியதை உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறே 1803-ல் அலகாபாத் பகுதியைப் பற்றிக் கூறும் ஒரு ஐரோப்பிய பார்வையாளர் அங்கு ஆண்டிற்கு ஹெக்டேருக்கு 7.5 டன் தானிய உற்பத்தி இருந்தாகக் கூறுகிறார். தவிர, கோயம்புத்தூரில், 1807 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஹெக்டேருக்கு 13 டன் அளவிலான நெல் உற்பத்தித்திறனைப் பற்றி அப்பகுதியின் பிரிட்டிஷ் அதிகாரியின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.*

*சென்னையைச் சுற்றியுள்ள செங்கல்பட்டுப் பகுதியில் உள்ள கிட்டத்தட்ட 2000 கிராமங்களில், 1760-களில் நிலவிய விளைச்சல் மற்றும் உற்பத்தித்திறனைப் பற்றிய விரிவானக் குறிப்புகள் இன்று நமக்குக் கிடைக்கின்றன. இச்சான்றுகளின்படி, அப்பகுதியின் மிகச் செழிப்பான நிலங்கள், ஹெக்டேருக்கு 9 டன்கள் வரையில் உற்பத்தி செய்தன. அச்சமயத்தில் இப்பகுதியை ஆங்கிலேயப் படைகளும் பிரெஞ்சுப் படைகளும் வட்டமிட்டவாறு நிலங்களைப் பாழ் செய்து கொண்டிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுதியின் சராசரி உற்பத்தித்திறன் ஹெக்டேருக்கு 2.5 டன்கள் அளவானது என்றாலும், இது நான்கு அல்லது ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சராசரி குடும்பத்திற்கு ஆண்டொன்றிகு 5.5 டன்கள் வரையிலான உணவி தானியம் கிடைக்க வழி செய்தது. நம் நாட்டின் தற்போதைய மதிப்பீடுகளில் மட்டுமல்ல, உலகிலுள்ள செல்வம் கொழிக்கும் நாடுகளின் மதிப்பிலும் கூட இது மிகச் சிறந்ததொரு நிலையையே உணர்த்துகிறது. இவ்வாறு வெகு சமீப காலம் வரை பாரதம் அன்னப் பெருக்கம் மற்றும் உதாரமாய் பகுத்தளிக்கும் கோட்பாடுகளைப் பின்பற்றி வந்துள்ளது.*

## *அன்னக்கோட்பாட்டை ஆங்கிலேயர்கள் முறித்தல்*

*ஆனால், பிரிட்டானியரின் வருகைக்குப் பிறகு, நிலங்களின் அமோக உற்பத்தி வெகு விரைவில் சீரழிந்தது. செங்கல்பட்டுப் பகுதியில் 1760-களில் ஒரு ஹெக்டேருக்கு கிட்டத்தட்ட 2.5 டன்களாக இருந்த உற்பத்தித்திறன் 1798-க்குள் மிகவும் சரிந்து, ஹெக்டேருக்கு 630 கிலோவாகக் குறைந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இருதிப் பகுதியிலிருந்து 1947-ல் பாரதம் சுதந்திரம் அடையும் வரையில் உள்ள நீண்ட கால இடைவெளி முழுதும் நாட்டின் விவசாய உற்பத்தித்திறன் சரிந்து படிப்படியாகத் தேய்வடைந்து வந்துள்ளதை அனைத்து ஆதாரங்களும் தெரிவிக்கின்றன. பாரதத்தின் சுதந்திரத்தை ஒட்டிய*

காலத்தில் நாட்டில் நெல்லின் சராசரி உற்பத்தித்திறன் ஹெக்டேருக்கு கிட்டத்தட்ட ஒரு டன்களாகவும், கோதுமையுடையது ஹெக்டேருக்கு கிட்டத்தட்ட 700 கிலோவாகவும் மற்ற தானிய வகைகளுடையது இதை விட மிகக் குறைந்த அளவினதாகவுமே இருந்தன. இவ்வாறே ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்குக் கிடைக்கக் கூடிய உணவின் சமவீத அளவும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெருமளவு குறைந்தது. ஆங்கிலேயரின் ஆட்சித் தொடக்கத்திலிருந்து முடிவு வரை பாரதமெங்கும் ஓர் இடம் அல்லது மற்றோர் இடமென முடிவில்லாத் தொடர்ச்சியாகத் தாக்கிய கடும் பஞ்சங்கள் இக்குறைபாட்டின் மிக அவலமான சான்றுகளாகும். 1880-ல் பிரிட்டானியர் முதன் முதலாக பஞ்சநிலையைப் பற்றிக் கவனம் கொள்ளத் தொடங்கிய உடன், அவர்கள் மதிப்பிட்டவாறு, ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு கிடைத்த உணவின் அளவு கிட்டத்தட்ட 280 கிலோ ஆகும். 1890-களில், அதாவது முதன் முதலாக முறையான புள்ளிவிவரங்கள் திரட்டப்பட்ட பின் உணவு உற்பத்தியானது ஆள் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 200 கிலோ மட்டுமே என மதிப்பிடப்பட்டது. இன்றைக்கும் நம் உற்பத்தித்திறன் இதே அளவிலேயே இருந்து வருகிறது.

இவ்வாறு பிரிட்டானியர்கள் பாரதீய மரபான உணவுப் பெருக்கத்தை இன்று வரை நீடித்திருக்கும் தீவிரப் பற்றாக்குறையாக மாற்றினர். பகிர்ந்தளிக்கும் பாரதத்தின் சமூக அமைப்புகளை வலிய திசை திருப்பி பற்றாக்குறையையே பண்பாடாக்கினர். தஞ்சாவூர் அரசர் 1801-ல் எழுதிய தம்முடைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சத்திரங்களைப் போன்றே, பாரதத்தின் அரசர்கள் நாடி வருவோருக்கு அளிப்பதற்கென நிறுவியிருந்த தான புண்ணிய அமைப்புகள் பிரிட்டானியர்களுக்கு தொடக்கத்திலிருந்தே ஏற்றுக் கொள்ள முடியாதவையாக விளங்கின. இந்த அமைப்புகளுக்கென வழங்கப்பட்டு வந்த பெருமளவிலான மானியம் மற்றும் சாதனங்கள் அனைத்தும் அரசால் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென ஆங்கிலேய அதிகாரிகள் வற்புறுத்தினர். இத்தகைய தானங்களை திரும்ப அபகரித்துக் கொள்வதில் பிரிட்டானிய அரசு காட்டிய தீவிர ஆர்வமே, 1799-ல் மைசூர் ராஜ்யத்தை கைப்பற்றும் சமயத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர் ஜெனரலாய் இருந்த ரிசர்ட் வெல்லஸ்லி, திவான் பூரணய்யாவை அரசின் வருவாயிலிருந்து இத்தகைய அமைப்புகளுக்கு ஏதேனும் தானமாக வழங்குவதில் அவர் ஈடுப்பட்டால் அதன் விளைவுகள் கடுமையானதாக இருக்கும் என்று எச்சரிக்கக் காரணமாகியது பெயரளவில் மைசூரின் பரம்பரை அரசால்

மீண்டும் திவானாக நியமிக்கப்பட்டிருந்த (ஆனால், உண்மையில் ஆங்கிலேயரால் மைசூர் ராஜ்யத்தின் மீது திணிக்கப்பட்டிருந்த) திவான் பூரணய்யா, உடனே தன்னுடைய ஆட்சியின் முதல் ஆண்டிலேயே தான புண்ணிய அமைப்புகளுக்கென வழங்கப்பட்டிருந்த தொகையான 2.33,954 காண்ட்ராய் பகோடாக்களை, 56,993 காண்ட்ராய் பகோடாக்களாகக் குறைத்தார்.

நிலங்களின் வளத்தைச் சுரண்டி, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பை சீர்குலைத்ததல்லாமல், பிரிட்டானியர் பாரத மக்களை தம்முடைய இயல்பான கோட்பாடான பகிர்ந்துண்ணும் தருமத்திலிருந்து பிறழ வைத்து, அவர்களின் சிந்தனையை மாசு படுத்தி, மற்றவர்களின் பசி, தேவைகளைப் பற்றிய சுரணை அற்றவராய் ஆக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர். பிறவிப்பயனாகக் கருதி, தம் நித்திய நியமமாய் பாரத மக்கள் கடைப்படித்த கோட்பாட்டை பிரிட்டானியர் ஒரு வீணான தீய பழக்கமாகக் கருதி இழிவு படுத்தினர். பிரிட்டானியர் கொண்டிருந்த இந்தக் காழ்ப்புணர்ச்சி அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த வசதி படைத்த பாரதமக்களை நிலைகுலைத்தது.

1829-ம் ஆண்டிலேயே கிழக்கிந்தியக் கம்பெனியின் அப்போதைய கவர்னர் ஜெனரலான வில்லியம் பெண்டிங்க் குறிப்பிடுகிறார். ....“முன்பு யாசகர்களுக்கும், பிராமணர்களுக்கும் உதாரமாய்த் தானம் செய்யப்பட்டு வந்த செல்வங்களும் சாதனங்களும் தற்பொழுது பெரும்பாலும் ஐரோப்பியர்களுக்கான ஆடம்பர உபசரிப்பிற்குச் செலவழிக்கப் படுகின்றன. மேலும், பொதுவாக பயனற்ற தானங்களுக்கென வழங்கப்படும் செல்வ மானது இப்போது பெருமளவில் குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

காலப்போக்கில் ஐரோப்பியர்களின் கலாச்சார ஈர்ப்புக்கு உள்ளான பாரதத்தினர் தம் நாட்டின் பகிர்ந்துண்ணும் பண்பினை அழிக்கப்பட வேண்டிய சமூகத் தீமைகளில் ஒன்றாகவே கருதத் தொடங்கினர். இந்தக் கேட்டினை ஒழிப்பதையே தங்களுடைய சமுதாயச் சீர்திருத்தத்தின் முக்கிய திட்டமாய்க் கொள்ளத் தொடங்கினர். இவ்வாறாக கேஷப் சந்திர ஸென் தொடங்கிய ‘சுலப் சமாச்சார்’ பத்திரிகையின் முதலாவது இதழிலேயே தானம் வழங்குவதன் தீமையை எதிர்த்துக் கடுமையான பிரச்சாரம் செய்யப்பட்டது. நவம்பர் 15, 1870-ல் அப்பத்திரிகையின் ஒரு கட்டுரை இவ்வாறு அறிவித்தது; ‘‘யாசகருக்கு தானம் வழங்குவது கருணைக்குரிய செயலல்ல - ஏனெனில் மற்றவர் இடும் பிச்சையில் பிழைப்பது முறைகேடான செயலாகும்.’’ மேலும், திறமையற்ற

*யாசகர்களுக்குத் தானமளிப்பதற்குப் பதிலாக "சமூகத்திற்குப் பயனளிக்கக் கூடிய பணிகளைச்" செய்யப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும் அக்கட்டுரை கூறியது. போதிய உணவு இல்லாத வரிடமிருந்த உணவிற்குப் பிரதியாக உழைப்பை எதிர்பார்க்கும் இந்தப் புதிய மனப்பான்மை வசதி படைத்த பாரத மக்களின் குறிப்பாகப் புது நாகரிகப் பண்பாட்டையும் பகுத்தறிவையும் பெற்றதாகச் சாற்றிக் கொண்டிருந்த பாரதீயர்களின் சிந்தனையில் ஆழ்ந்து பதியத் தொடங்கியது.*

*எனினும் ஆங்கிலேய அதிகாரிகளும், பாரத சமூக 'சீர்திருத்த வாதி'களும் நீண்ட காலம் முயன்றும், பாரதத்தின் பகுத்துண்ணும் பண்பாட்டை அவர்களால் முழுமையாக ஒழிக்க முடியவில்லை. 1880-ஆம் ஆண்டில் பஞ்சகால ஆய்வுக் குழு பஞ்சகாலங்களில் தக்க நிவாரணம் அளிப்பதற்கான வழிகளைப் பற்றி கலந்தாலோசிக்கையில், பாரத மக்களின் பகிர்ந்தளிக்கும் பெருந்தன்மையை ஒரு பெரும் முட்டுக்கட்டையாக அவர்கள் கருதும் அளவிற்கு நாடு முழுவதிலும் இப்பழக்கம் பரவலாக ஊறியிருந்தது. மக்களே மக்களைப் பராமரிக்கும் இம்முறையால் பிரிட்டிஷ் ஆட்சியின் அதிகாரத்திற்கும் கௌரவத்திற்கும் கேடு விளையும் என்று எண்ணிய பஞ்ச ஆய்வுக்குழு இவ்வாறு பரிந்துரை செய்தது.*

*"பாரதம் அதனுடைய தானக் கொள்கைகளுக்குப் பெயர் போனது. இங்கிருக்கும் அனைத்து வகுப்பினரும் தம்மால் இயன்ற அளவு தான புண்ணியங்களைச் செய்வதைத் தம் இன்றியமையாத தார்மீகக் கடமையாக உணர்கின்றனர். இம்மாதிரியான தான புண்ணிய காரியங்களுக்குப் பஞ்சம் போன்ற நெருக்கடியான காலங்களின் ஆரம்ப கட்டத்தில் இடம் கொடுக்கலாம்....ஆனால் பஞ்சம் தீவிரமடைந்து விட்டதெனில் இப்பணிகள் முறையான ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டாலேயன்றி கொடும் தீமையாக உருவெடுக்கக் கூடும் ... அரசாங்கம் பஞ்ச நிவாரணப் பணிகளை முற்றிலுமாய் தானே ஏற்றுக் கொண்டு தேவை உள்ளோர்க்கெல்லாம் ஏதேனும் வகையில் ஆறுதலையும், அனைத்து யாசகர்களுக்கும் மற்றும் பஞ்சத்தால் பாதிக் கப்பட்டவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான எல்லைகள் உடைய இருப்பிடமும் ஏற்பாடு செய்த உடனேயே தெருப்பிச்சைகளும், மற்றவர்களுக்குப் பொது விநியோகமாக வழங்கப்படும் தானங்களும் தடை செய்யப்பட வேண்டும், ஏன், முடியுமாயின் முற்றிலுமாய் நிறுத்தப்பட வேண்டும்."*

பிரிட்டானிய ஆட்சி பஞ்சகாலங்களில் ஏற்பாடு செய்த சிறுஅளவிலான நிவாரணம், பாரதீய மரபின் நியமனப்படி ஒரு யாசகருக்கு வழங்க வேண்டிய மிகுந்த உபசாரத்திற்கும் கௌரவத்திற்கும் முற்றிலும் மாறாக இருந்தது. பஞ்சகால ஆய்வுக்குழு பரிந்துரைத்த நிவாரணமாவது, 'விசேஷமாய் ஏற்படுத்தப்பட்ட வேலை மையங்களில் ஒரு நாள் கடும் உழைப்பிற்குப் பிரதியாக ஒரு ஜீவனாம்சத் தொகை பராமரிப்பிற்கு மட்டும் போதுமானதாக, ஆனால் அதைவிட சிறிதளவும் அதிகரிக்காத வண்ணம் வழங்கப்பட வேண்டும்' என்பதே. வேலை செய்ய முடியாத அளவு உடல் நிலம் குன்றியோருக்காக மேற்பார்வையாளரின் முறையான சோதனைக்குப் பிறகு ஒரு அற்ப அளவினதான ஜீவனாம்சம் வழங்கவும் மற்றும் மேற் பார்வையாளரின்படி ஒருவர் வேலை செய்ய ஓரளவிற்குத் திறன் உள்ளவராகத் தோன்றிய உடனேயே அந்த ஜீவனாம்சத் தொகை நிறுத்தப்பட வேண்டும் என்றும் அக்குழுவினர் பரிந்துரைத்தனர். ''நாட்டின் மரப்புபடி'', ''பொதுவில் வெளிவர இயலாத'' பெண்களிடமிருந்து கூட இக்குழுவினர் வேலையை எதிர் பார்த்தனர். அவர்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் ஜீவனாம்சமாக தானியம் வழங்கப்படுவதற்குப் பதிலாக அரசாங்கத்திற்கென பஞ்சு நூல் நூற்கும் வேலையில் அவர்களை ஈடுபடுத்தும்படியும் அக்குழுவினர் பரிந்துரைத்தனர்.

1880-ம் ஆண்டு பஞ்சகால ஆய்வுக் குழுவினரின் அறிக்கை நெருக்கடியான நிலைமைகளையும் பஞ்ச நிவாரணப் பணிகளையும் நிர்வகிக்க ஒரு பெரும் ஆளும் வகுப்பு உருவாக அடித்தளமாகியது. மேலும் இத்தகையதான பிரிட்டானியர்களின் மதிப்பீடுகளும் உணர்வுகளுமே நம் நாட்டில் அரசு நிர்வாகத்தின் கீழ் இன்றும் செயல் பட்டு வரும் உணவு சேமித்தல் மற்றும் வினியோகித்தலைப் பராமரிக்கும் அமைப்பிற்கு அடிப்படையாயின.

இவற்றிற்கெல்லாம் பின்னும், தங்கள் பாரம்பரியத்தின் மீதான இத்தகைய கடுமையான தாக்குதல்களுக்குப் பிறகும், சாதாரண பாரத மக்கள் அன்னத்தை மிகுதியாக உற்பத்தி செய்வது மற்றும் தான் உண்ணும் முன் மற்றவர்க்குப் பகிர்ந்தளிப்பது என்னும் அன்னக்கோட்பாட்டைப் பற்றி வெகு சமீப காலம் வரை சிரத்தையும் ஆர்வமும் கொண்டிருந்தனர். ஆனால், இடையறாது தொடர்ந்த பற்றாக்குறையாலும் மற்றும் பாரதத்தின் பொது வாழ்க்கை முறை மேலை நாடுகளைப் பின்பற்றி பெருமளவில் மாறியதாலும் பாரத்தின் இயல்பான பகிர்ந்துண்ணும் மரபு அழியத் தொடங்கியது. எஞ்சியுள்ள பாரதீய வழிமுறைகளின்

ஞாபகார்த்தங்களும் மறையத் தொடங்கிவிட்டன. மெலும், வசதியும் திறைமையும் உள்ள பாரத மக்களுள், எங்கும் காணப்பெறும் தீவிரப் பற்றாக்குறைப் பற்றியும், தம்மைச் சுற்றிலுமுள்ள மக்கள் மற்றும் விலங்குகளின் பசிப்பிணியைப் பற்றியும் ஒரு துளியும் குற்றவுணர்வோ, சுரணையோ காணப்படுவதில்லை.

பாரத மக்களாய், படைப்பு முழுவதையும் பேணிப் போற்றுதலையே நம் உணர்வாய், பிறவிப் பயனாய்க் கருதி வந்துள்ள நாம் இப்போது உணர்ச்சிகள் அற்றுப் போய் மனிதர்கள் மற்றும் விலங்கினங்களின் பசியையும் பற்றாக்குறையையும் பற்றிய சுரணை இன்றி, நடைப்பிணங்களாகிவிட்டோம். நம்மைச் சுற்றிலும் உள்ள பசியை அறிந்தும் அறியாதவர்களாய், கண்டும் காணாதவர்களாய் அப்பசி ஆற்றாமல் நெறி தவறி நிற்கிறோம். வசதி படைத்த திறமையுள்ள பாரத மக்களான நாம் அனைவரும் மற்றவர்களின் பசிப்பிணி துடைக்காத இந்தக் கோர பாவத்தின் பங்காளிகளாய் வாழ்ந்து வருகிறோம்.

## பாவத்திற்குப் பிராயச்சித்தம்

இனியும் நாம் பாவத்திலேயே தொடர்ந்து உழல முடியாது. இத்தகையதானதொரு பாவத்தைச் சுமப்பதிலிருந்து மீண்டு விடுபடாத எந்த ஒரு நாடும் தானாக தன் இயல்பான நிலையைப் பெறுவது சாத்தியமன்று. பாரத மண்ணின் மான்புலத்தைத் தற்கால உலகில் நிலைநாட்ட முயலும் நாம் முதலில் இங்கு வியாபித்துள்ள பசிப்பிணியை நீக்குவது இன்றியமையாதது.

நாம் அடைந்துள்ள இப்பாவத்திலிருந்து முறையாக விடுபெற வேண்டுமெனில் நம் பெரும் ரிஷிகளின் மூலமாய் ஒலிக்கும் ‘அன்னம் பஹுகுர்வீத’, ‘அன்னப் பெருக்கத்தை உருவாக்கு’ என்ற மீறத் தகாத ஆணையை மீண்டும் சிரத்தையுடன் ஏற்று நாட்டில் அன்ன உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். கடந்த ஐம்பது ஆண்டுகளில், நம் நாட்டின் முதுகெலும்பாய் விளங்கும் விவசாயத்தை உயர்த்த நாம் முழு மனதுடன் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. எனினும் ஓரளவிற்கு முயன்றதன் பயனாய் இன்று சராசரி உணவு தானிய உற்பத்தி ஹெக்டேருக்கு இரண்டு டன்களாக உயர்ந்துள்ளது. ஆனால் இந்தச் சராசரி உற்பத்தித்திறனும் கூட பதினெட்டாம் நூற்றாண்டின் செகல்பட்டைப் போன்ற கடினமான வறண்ட கடலோரப்பகுதியில் சாதிக்கப்பட்ட உற்பத்தித்திறனை விடக்

*குறைவாகவே உள்ளது. மேலும், உலகமெங்கும் தற்போது நிலவும் உற்பத்தித்திறனைவிட இது மிகக் குறைந்த அளவாகும். தவிரவும் உற்பத்தித்திறனை உயர்த்த நாம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பாரதத்தின் கிட்டத்தட்ட 30% விளைச்சல் நிலங்களிலேயே நடைபெற்றுள்ளன. பெருமளவிலான மூலபொருட்சானதங்களையும் நவீன தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தும் இந்நிலங்கள் வியாபாரத்திற்கென்றே உணவு உற்பத்தி செய்கின்றன. நாட்டின் மீதி 70% விளைச்சல் நிலங்கள், இவை பெரும்பாலும் பாரதத்தின் ஜீவ நதிகள் ஓடிச் செழிப்பூட்டும் பரந்த சம வெளிகளில் இருப்பவை ஆயினும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சீரழிந்து இப்பொழுதும் புறக்கணிக்கப்பட்டு அந்நிலையிலே நீடித்து, ஆண்டிற்கு மட்டாக ஏதோ ஒரு பயிரையே வழங்கி வருகின்றன.*

*இந்த நிலங்களைச் சிரத்தையுடன் பேணிப் பராமரித்தால், பாரதம் தொன்றுதொட்டுப் போற்றி வந்துள்ள உணவுப் பெருக்கத்தை நாம் மீண்டும் காண்பது உறுதி. நிலங்கள் சோம்பி இருப்பதால் ஜீவனமற்று சோம்பி இருக்கும் பெரும்பான்மையான பாரத மக்களும் இந்த முயற்சியின் மூலம் புத்துணர்ச்சியுடன் விழித்தெழுவர். பாரதத்தில் மக்கள்தொகைப் பெருக்கத்தால் அனைவருக்கும் போதிய அளவிலான உணவு உற்பத்தி உண்டாக்குவது கடினம் என்று எங்கும் கூறப்படுகிறது. ஆனால் இயற்கையின் வரம் பெற்றுள்ள பாரத நாட்டின் செழிப்பான நிலங்கள் வற்றாது வழங்கக் கூடிய வளம் படைத்தவை. உலகில் வேறெந்தப் பகுதிக்கும் கிடைக்காத இயற்கையின் அருளைப் பெற்றுள்ள பாரத நாட்டில், பாதிக்கும் மேற்பட்ட நிலப்பரப்பு விவசாயத்திற்கு உகந்ததாய், இந்நாட்டின் ஒவ்வொரு பகுதியின் ஊடேயும் ஆண்டு முழுதும் நீரோட்டம் உடைய பெரும் ஆறுகள் பாய்வதாய், தட்பவெப்ப நிலையும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஆண்டு முழுதும் பல்வகைப் பயிரிட அனுகூலமானதாய்த் திகழ்கிறது. ஆக, நெருக்கடியான மக்கள் தொகையைக் கொண்டுள்ள போதிலும், பாரதத்தில் தற்பொழுதுள்ள ஆள் ஒருவருக்கான சராசரி விளைச்சல் நிலமாவது சீனாவைப் போல் இரு பங்காகவும், ஐரோப்பாவிற்குக் கிட்டத்தட்ட சமமாகவுமே விளங்குகிறது.*

*நாடெங்கிலும் பரவியுள்ள பசிப்பிணிப் பாவத்திலிருந்து விமோசனம் பெற வேண்டுமெனில், சோம்பியிருக்கும் விளைச்சல் நிலங்களை மீண்டும் உயிர்ப்பித்து, பேணிப் பாதுகாத்து இதன் மூலம் இயற்கை நமக்கு அளித்துள்ள வெகுமதியான நன்னிலங்களும், நீர் வளமும், தட்பவெப்ப நிலையும் உணவாய்ப் பெருக்கெடுக்கச் செய்ய*

வேண்டும். நில வளம்

நாட்டின் வளமாய், மக்களின் வளமாய் உருப்பெற்றால் பற்றாக்குறையும் அழிந்து நம் பாவமும் அகலும். சுதந்திரத்திற்குப் பின் இதுவரை நாம் மொத்த உணவு தானிய உற்பத்தியில் ஆண்டொன்றிற்குக் கிட்டத்தட்ட **2.5%** வளர்ச்சியை மட்டுமே சாதித்துள்ளோம். நம் ஜனத்தொகை வளர்ச்சியும் கிட்டத்தட்ட இதே அளவினதாக உள்ளபடியால் நம்மால் கடந்த **200** ஆண்டுகளாக நம் நாட்டில் நீடித்து வரும் பற்றாக்குறைக்கு ஈடு செய்து நம் நாட்டை வளம் கொழிக்கும் நாடாக மீட்க இயலவில்லை. இந்நிலை மாற வேண்டுமெனில், உணவு உற்பத்தியைப் பெருக்கிப் பாரதத்தில் அன்ன மிகுதிக்கு வழி வகுக்க வேண்டுமெனில், பாரத மக்களாகிய நாம் நம்முடைய சிந்தை, செயல்திறன் மற்றும் சாதனங்கள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி முழு சிரத்தையுடன் நம் நாட்டின் நிலங்களில் விதைக்க வேண்டும். அவை விளைந்து பயிராக, பாரதத்தின் அனைத்து மக்களும் மாக்களும் பசியாற, சுபிட்ச நிலை ஏற்பட, இம்மண்ணில் தடைபட்டுப் போன 'வார்த்தை' மீண்டும் தொடரும். சுபிட்ச நிலையுடன் நாம் சில காலமாக அடைய முயற்சித்து வரும் மற்றனைத்துச் சீரும் சிறப்பும் தாமே விரைவில் பெருமளவில் வந்து சேரும்.

'அன்னம் பஹுகுர்வீத' என்னும் பாதத்தின் மீறத் தகாத கோட்பாட்டை நிறைவேற்ற நாம் நம்முடைய செழிப்பான நிலங்களை மேலும் கவனித்துப் பேணிப் போற்றுவது இன்றியமையாதது. ஆயினும் அன்ன மிகுதி ஏற்படும் வரையில் நம்மைச் சுற்றியுள்ள பசிப்பிணியை எவ்விதத்திலும் புறக்கணிக்கவியலாது. நம் சனாதம பாரதீய தருமம் ஆணித்தரமாகப் போதித்துள்ளவாறு, பசியுடைய மக்களும் மாக்களும் ஒரு நாடு மற்றும் சமூகத்தின் அனைத்துப் புண்ணியங்களையும் அழிக்கவல்லவர்களாம். அத்தகைய நாட்டை தேவர்களும் புறக்கணித்துவிடுவர். தேவர்களால் கைவிடப்பட்ட அந்நாட்டை சீர்தூக்க எடுக்கப்படும் எல்லா முயற்சிகளும் வீணே. பொதுவாக, நாடு மட்டுமல்ல, நாட்டின் ஒவ்வொரு இல்லறத்தாரும் தன்னைச் சுற்றிலுமுள்ள பசியின் பாவத்திற்கு இலக்காவார். அதிகாரபூர்வமான நம் வேதங்கள் கட்டளை இட்டுள்ளவாறு, 'பகுத்தண்ணாதவன் பாவத்தையே உண்கிறான்.'

எனவே, நாம் நிலத்தின் மீது கவனம் செலுத்தி உணவுப் பெருக்கத்திற்கான பெரு முயற்சிகளில் ஈடுபடும் முன்னரே பகுத்துண்ணும் மீறலாகாத பண்பாட்டை உடனடியாகப் பின்பற்ற வேண்டும். நம் பாரத மக்கள் மற்றும் கால்நடைகளின் பசிப்பிணியை அகற்றியே தீருவோம் என தேசிய உறுதிமொழியை மேற்கொள்ள வேண்டும். நாட்டில் அனைவரது பசியையும் ஆற்றுமளவு போதிய உணவு இல்லையெனினும், பஞ்சகால நிலைமையிலும் கூட, அறவழியில் ஒழுகும் சமுதாயமும், இல்லற தருமத்தைப் பின்பற்றும் இல்லறத்தாரும் தம்மிடம் உள்ள சிறிதளவு உணவையும் பகிர்ந்தளிப்பதிலிருந்து ஒரு பொழுதும் பிறழ மாட்டார்கள். இத்தகைய பகிர்ந்துண்ணுதலை நாம் உடனடியாக கடைப்பிடிக்கத் தொடர்ங்கினால், உணவுப் பெருக்கத்திற்கான வழிமுறைகள் தாமே பிறப்பது உறுதி.

பாரத மண்ணின் மக்களாகிய நமக்குப் பகிர்ந்தளித்தல் இயல்பானதே. பகிர்ந்தளிக்கும் முறையையும். அன்னதானம் செய்யவும் யாரும் நமக்குப் புதிதாகக் கற்றுத் தரத் தேவையில்லை. நம் முன்னோர்கள் நமக்கு அனைத்தின் மகிமையையும் அன்னப் பெருக்கத்தின் முக்கியத்துவத்தையும் அன்னதானத்தின் சிறப்பையும் விரிவாக விளக்கியுள்ளனர். நீண்ட காலமாக நாம் அவர்கள் விதித்த அன்னத்தைப் பெருக்குதல், பகிர்ந்துண்ணுதல் என்ற கோட் பாடுகளை மிகவும் சிரத்தையுடன் பின்பற்றி வந்துள்ளோம். இத்தகைய ஒரு நாட்டிற்கு வெறும் 200 ஆண்டுகளின் பற்றாக்குறையையும் தவறுகளையும் சீராக்குவது கடினமன்று. பாரதப் பண்பாட்டின் சாரமாய் விளங்கும் பகிர்ந்துண்ணும் கோட்பாட்டை நாம் எப்பொழுதும் நம் நினைவில் நிறுத்துவோமாக. இப்புண்ணிய பூமியின் ஊடே மாபெரும் அன்னதானம் மீண்டும் தழைக்குமாக. அன்ன வெள்ளம் இந்நாட்டின் ஊர்தோறும் ஊடுருவிப் பொங்குமாக. இத்த கையதொரு அன்னதானத்தின் விழிப்பில் அன்னத்தின் மிகுதி ஏற்படுவது உறுதியே.

மீண்டும் நாம் பாரத மக்களாய் வாழ, அமோகமான அளவில் உணவை உற்பத்தி செய்து பகிர்ந்தளிக்கும் விரதத்தைக் கடைப்பிடித்து ஒழுக நாம் உள்ளத்திலும் உடலிலும் உரம் பெறுவோமாக.

## *சென்டர் பார் பாலிஸி ஸ்டீஸ், சென்னை*
### *(கொள்கை ஆய்வு மையம், சென்னை)*

ஒரு நாட்டை உருவாக்கும் பணியில் மக்களின் ஊக்கமும் விருப்பங்களும் மட்டுமே கருத்தில் கொள்ளத்தக்கன. ஒரு நாடு தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் தன் இலட்சியத்தை நோக்கிச் செல்லத் தீர்மானித்து விட்டதெனில், அதற்கு வேண்டிய கருவிகளையும் சாதனங்களையும் திரட்டுவது எளிதே. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் மகாத்மா காந்தியின் தலைமையில் நம்முடைய சக்தி அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஒரு மாபெரும் தேசிய முயற்சியில் ஈடுபட்டபோது நாம் இத்தகைய தீவிர ஊக்கத்தையும் உறுதியையும் வெளிப்படுத்தினோம்.

ஆனால், சுதந்திரம் பெற்ற பிறகு மகாத்மா காந்தி நம்முள் எழுப்பிய ஊக்கத்தையும் உறுதியையும் ஏனோ இழந்துவிட்டோம். நீண்டகால அடிமை வாழ்வினால் ஊறிப் போன மனச்சோர்வாலும் இயந்திரமாய் பிறரைப் பின்பற்றும் வலுக்கேடான பழக்கத்தாலும் முடங்கியுள்ளோம். இப்பொழுது ஐம்பது ஆண்டு காலமாகச் சுதந்திர பாரத நாடாய் விளங்கும் நாம் ஊக்கமில்லா வாழ்க்கையையே நடத்தி வருகிறோம். மேலை நாடுகளை கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதும், அவர்கள் நிலையை எட்டிப் பிடிக்க முயலுவதுமாய், இதற்கிடையே எவ்வாறோ நிகழ்காலத்தைச் சமாளித்தவாறே உயிரற்ற நடைப்பிணங்களாய்க் கிடக்கிறோம். நம் நாட்டின் நிலைமையையோ அல்லது நம்மைச் சுற்றியுள்ள உலகத்தின் நிலைமையையோ அறிந்து கொள்ள உண்மையான முயற்சிகள் எவற்றையும் நாம் மேற்கொள்ளாமல் அவ்வபோது எவை புதுப்பாணியென்று உலகச் சந்தையில் விளம்பரப்படுத்தப் படுகின்றனவோ அவற்றையே பின்பற்ற முயல்கிறோம், அல்லது, ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் விட்டுச் சென்றுள்ள அமைப்புகளும் நிறுவனங்களும் எவற்றை நம் மீது திணிக்கின்றனவோ அவற்றிற்கு ஏற்றாற் போலவே நம் வாழ்வை அமைத்துக் கொண்டு வருகிறோம்.

எனவே, இனி நாம் புது வாழ்வை தொடங்க வேண்டியது இன்றியமை யாததாகும். நாடுகளை உருவாக்கும் பணிக்குத் தேவையான ஊக்கத்தையும் உறுதியையும் எவ்வாறேனும் நாம் நம்முள் மீண்டும் ஒளிரச் செய்ய வேண்டும். இது நிகழ வேண்டுமெனில், நாம் பாரதத்தின் தனிப் பெருந்தன்மையைப் பற்றியும், இன்றைய உலகில் நாம் வகிக்கும் இடம் மற்றும் நாம் ஆற்ற வேண்டிய பங்கைப் பற்றியும் தீர ஆராயந்து சிந்திக்க வேண்டும்.

சென்டர் பார் பாலிஸி ஸ்டீஸ் நிறுவனம் பாரதம் தன்னைத் தானே அறிந்து கொள்ளும் இந்த முயற்சியைத் தொடங்கவும் நாட்டை உருவாக்கும் பணியில் பாரத நாட்டினர் அனைவரும் உள்ளார்ந்த பற்றுடன் ஈடுபட வாய்ப்பளிக்கவல்ல ஒரு அரசமைப்பை வரையறுக்கும் நோக்குடனும் நிறுவப்பட்டுள்ளது.

மையத்தின் மற்ற வெளியீடுகள்:

***பாரதீய சித்த மானஸ ஏவம் கால, 1993,*** ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில்
***அயோத்யா அண்ட் தி ப்யூச்சர் இண்டியா, 1993,*** ஆங்கிலத்தில்
***இண்டியன் எகானமி அண்ட் பாலிடி, 1995,*** ஆங்கிலத்தில்
***அன்னம் பஹுகுர்வீத, 1996,*** ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில்

*இந்தக் கட்டுரை, மையத்தால் வெளியிடப்பட்ட இதே தலைப்புள்ள புத்தகத்தின் சாரமாகும். மூலப் புத்தகத்தின் ஹிந்தி மற்றும் ஆங்கிலப் பதிப்புகள் ஸ்ரீ திருமலையில், 1996-ல் அக்டோபர் 9, 10 தேதிகளில் நடைபெற்ற அன்னபாஹுல்யம் மற்றும் அன்ன தானத்தைப் பற்றிய தரும ஸதஸ்ஸில் வெளியிடப்பட்டன. புத்தகத்தின் தமிழ்ப்பதிப்பு, ஸ்ரீ காஞ்சிமடத்தில், 1998-ல் டிசம்பர் 15 ஆம் தேதி அன்று, பரமாசார்யாள் ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஐந்தாவது ஆராதனை மகோற்சவத்தில், ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் வெளியிடப்பட்டது. இக்கட்ரையில் உள்ள மேற்கொள்களின் முழு விவரங்களை மூலப் புத்தகத்தில் காணலாம். இங்கு வழங்கப்பட்டுள்ள உணவு கிடைத்தலைப் பற்றிய குறிப்புகள் 1990-ல் உணவு மற்றும் விவசாயத்தின் நிறுவனம் தொகுத்த புள்ளிவிவரங்களிலிருந்து எடுக்கப் பட்டுள்ளன. இவைப் பற்றிய விரிவான குறிப்புகள் 1995-ல் தொகுக்கப்பட்ட 'இண்டியன் எகானமி அண்ட் பாலிடி' என்ற மையத்தின் பதிப்பில் உள்ளன.*

*பதிப்புரிமை: சென்டர் பார் பாலிஸி ஸ்டடீஸ், சென்னை 1998*
*சென்டர் பார் பாலிஸி ஸ்டடீஸிற்காக டாக்டர் ஜிதேந்த்ர பஜாஜ் அவர்கள் வழியாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.*

*அச்சுக்கோப்பு: அனு கிராபிக்ஸிஸ்டம்ஸ், சென்னை*
*அச்சகம்: எம்.டபிள்யூ. பிரஸ், சென்னை*

*ஐ.எஸ்.பி.என்: 81-86041-09-5*